பொருளடக்கம்

# உயிரூட்டும் உபதேசங்கள்




தொகுப்பு

மௌலவி அல்ஹாஜ் அல்ஹாபிழ் – அப்ஸலுல் உலமா

**T.S.A. செய்யிது அபூதாஹிர் பஹீம் மஹ்ழரி ஃபாஜில் ஜமாலி** M.A.,M.Phil.,

அல் அஸ்ரார் மெய்ஞான மாத இதழ்



வெளியீடு

**பஹீமிய்யா பப்ளிஷர்ஸ்**

9841567213, 9790967213



PDF ISLAM

# முகவுரை

அனைத்துப் புகழும் அல்லாஹ்வுக்கே உரித்தாகும். அவன் தன் பேரொளியின்பால் தான் நாடியவர்களை வழி நடத்துகிறான். தன் விசேஷ அடியாராகிய முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை தன் நூரிலிருந்து வெளிப்படுத்தினான். இன்னும் அவர்களை அருளாகவும், அரிய உபகார பொருளாகவும் (ரஹ்மத், நிஃமத்) அனுப்பி வைத்தான்.

அவனின் ஸலவாத்தும் ஸலாமும் முத்து முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மீது என்றென்றும் நிலவுமாக. அவர்களோ பாவிகளுக்கும் பரிந்துரைக்கும் பரிந்துரை (ஷபாஅத்) உடையவர்கள், மகாமுல் மஹ்மூத் என்னும் புகழப்பட்ட பெரும் ஸ்தானத்தின் அதிபதி, லிவாவுல் ஹம்த் எனும் நீண்ட நிழலுடைய கொடியின் சொந்தக்காரர்.

இன்னும் அவர்களின் திருக்குடும்பத்தார்களாகிய அஹ்லபைத்து கள் மீதும், அழகு தோழர்களான அஸ்ஹாபுகள் மீதும் அவர்களைத் தொடர்ந்த நாதாக்கள் நல்லோர்கள் யாவர் மீதும் நிலவுமாக.

என் இதயவேந்தர், ஈருலக இரட்சகர், கை தந்து என்னைக் காக்கும் காவலர், என் இதயத்தின் துரு நீக்கும் குருநாதர், ஷெய்கேகாமில் அல் ஆரிப் பில்லாஹ் ஆஷிகுர்ரஸூல் நூருல்ஹுதா முர்ஷித் காஜா ஃபஹீமுல்லாஹ் ஷாஹ் சிஷ்தி காதிரி நக்ஷபந்தீ சுஹரவர்தீ ஸனூசி வகலிபயே சலாசில அர்பயீன் மத்தலில்லஹுல் ஆலி வதாம பைழஹுல் முதவாலி அவர்களின் கடைக்கண் கிருபைப் பார்வையில் தம் துன்பங் களைத் தொலைத்துவிட்டு இன்பப் பெருவாழ்வு வாழும் எண்ணிறந்த சீடர்களில் நானும் ஒருவன். அந்தப் பெரும்பேற்றை நல்கிய நாயனுக்கே நவிலும் புகழெல்லாம். அல்ஹம்து லில்லாஹ்.

பூரணப் பேரழகர், முழு நிலவொளி முகத்தார், என் முர்ஷித் நாயகம் அவர்களின் உத்தரவிற்கிணங்க உருவாகி கருவாகி உங்கள் கண்களில் காட்சி தரும் ஞானநூல் அல்–அஸ்ரார் என்னும் மாதமலர்.

அந்த மெய்ஞான மலரில் ஆன்றோர்கள், சான்றோர்கள், ஆலிம்கள், ஆலிமாக்கள், பாவலர்கள், சமுதாயக் காவலர்கள் என

PDF ISLAM

பலரும் தம் அற்புத ஆற்றல்களால் அருவிபோல் அழகு தமிழில் தம் ஆக்கங்களை எழுதி வருகிறார்கள். அதனால் பயனடைந்தோர் பலர். அதனைப் பாராட்டியோர் பலர்.

ஆனால், அந்த அற்புத ஆக்கங்களெல்லாம் அந்தந்த மாதங்களின் நிறைவிலேயே காலாவதியாகிப் போவது இக்காலத்தின் சூழ்நிலை. மாதஇதழ் என்றால் அந்த மாதத்திற்குப் பின் அதனைப் பார்க்கவும் படிக்கவும் கூடாதோ என்பது பலரின் மாற்ற முடியாத மனநிலை. மற்ற மாத, வார இதழ்களைப்போல சுடச்சுட செய்திகள், நாட்டு நடப்புகள், அரசியல் தகவல்கள், விமர்சனங்கள் போன்றவற்றை பொதிந்ததல்ல உங்கள் அல்-அஸ்ரார்.

மாறாக, உயர்மறைக் குர்ஆனின் உன்னத விளக்கங்கள், உத்தம நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் உரைத்த பொன்மொழிகள், வலிமார்களின் வழிகாட்டல்கள், ஆன்றோர்களின் அறிவுரைகள், சான்றோர்களின் சரித்திரங்கள் என பயனுள்ள தகவல்களைப் பொதிந்து மாதந்தோறும் மலரும் மலரே அல்-அஸ்ரார் மாத மலர். அதன் படைப்புகளைப் பொறுக்கி எடுத்து, கோர்த்து கோர்வையாக்கி பலரும் பயன்பெறும் வண்ணம் நூல் வடிவில் வழங்கினால் அது வாசகர்களின் தேடுதலுக்கு பொருள் தரும் பொக்கிஷமாய் அமையும் என்பது எமது எண்ணம்.

அதனாலேயே அவற்றிலிருந்து ஓரிரு கட்டுரைகளையும் அநேக அறிவுரைகளையும் தனித்தெடுத்து தனி நூலாக வெளியிட்டால் என்ன என்ற எண்ண மேலீட்டால் உருவானதே இந்நூல், **உயிரூட்டும் உபதேசங்கள்** என்னும் நன்நூல்.

வல்ல அல்லாஹ் வான்மறையில்,

(நபியே) நீங்கள் நல்லுபதேசம் செய்யுங்கள், நிச்சயமாக நல்லுபதேசம் நம்பிக்கையாளர்களுக்கு பயனளிக்கும். (52:55)

(ஆகவே) நல்உபதேசம் (மக்களுக்கு) பயனளிக்கும் வரையில் நீங்கள் உபதேசித்துக் கொண்டே வாருங்கள். (87:09)

இவ்வாறாக பல இடங்களில் உபதேசத்தின் அவசியத்தையும், நினைவூட்டலின் அகமியத்தையும் கூறிக்கொண்டே இருக்கிறான்.

எனவேதான் அவனும் அருள் மறையில் பல நபிமார்களின் வரலாறுகளைக் கூறி அவற்றின் மூலம் படிப்பினைப் பெறச் செய்கிறான்.

PDF ISLAM

அந்த மேன்மக்களின் உயரிய உபதேசங்களைத் தேர்ந்தெடுத்து தனியொரு நூலாகத் தரவேண்டும் என்ற பேரெண்ண பெருமுயற்சியின் சிறு முன்னோட்டமே இந்நூல்.

அன்பர்கள், தங்கள் இல்ல நிகழ்ச்சிகளில் இதுபோன்ற நூல்களை அன்பளிப்பாக வழங்கி பெருநூல்கள் பல பெருகிவர துணை புரிவீர்களாக.

வல்ல இறைவன் நம்மை நேர்வழி மீதில் நிலைப்படுத்தி அருள் வளங்கள் அனைத்தையும் குன்றாது, குறையாது தருவானாக. ஆமீன். பிஹக்கி தாஹா வயாசீன்.

ஸல்லல்லாஹு அலாமுஹம்மத் யாரப்பி ஸல்லி அலைஹி வஸல்லிம்.

*அன்புடன்*

**அபூதாஹிர் பஹீமி மஹ்ழரி**

**இப்னு**

**சுல்தான் அப்துல்காதிர் பக்ரி**

## உள்ளே...


| | | |
|---|---|---|
| 1. | நீதர் நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) மீது நித்தமும் சொல்வோம் ஸலவாத்து | 5 |
| 2. | இதயத்தில் நிறைந்த இமாம் ஹஸன் ஹுஸைன் ரலியல்லாஹு அன்ஹுமா | 15 |
| 3. | அருள் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் அரபா உரை | 21 |
| 4. | நபி வழியில் மவ்லித்- தர்கா – உரூஸ் – தாயத்து | 31 |
| 5. | கூடு, கொடி கூடுமா? | 37 |
| 6. | மறைந்தோருக்கு நன்மைகளை சமர்ப்பணம் செய்ய சன்மார்க்கத்தில் இடம் உண்டா? | 47 |
| 7. | நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் நவின்ற நாற்பது நற்பதம் | 53 |
| 8. | பேரறிஞர் லுக்மான் – அலைஹிஸ்ஸலாம் – அவர்களின் அரிய அறிவுரைகள் | 61 |
| 9. | உயர் முஹ்யித்தீன் ஆண்டகையின் உணர்ச்சியூட்டும் உபதேசங்கள்! | 66 |


PDF ISLAM

# 1

## நீதர் நபி
### (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்)
## மீது நித்தமும் சொல்வோம் ஸலவாத்து

إِنَّ اللَّهَ وَمَلَائِكَتَهُ يُصَلُّونَ عَلَى النَّبِيِّ يَا أَيُّهَا الَّذِينَ آمَنُوا
صَلُّوا عَلَيْهِ وَسَلِّمُوا تَسْلِيمًا

நிச்சயமாக அல்லாஹ்வும், அவனது அமரர்களும் நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் மீது ஸலவாத்துச் சொல்கின்றனர், (ஆகவே) விசுவாசிகளே நீங்களும் அவர்கள் மீது ஸலவாத்தும், ஸலாமும் கூறிக் கொண்டிருங்கள். (அல்குர்ஆன் 33:56)

மேற்கூறப்பட்ட இந்த அருள் வசனத்தின் மூலம் திரு நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் பெருமாண்பை மனிதகுலத்திற்கு இறைவன் உணர்த்துகிறான், உணரச் செய்கிறான். உணருமாறு உத்தரவிடுகிறான்.

இந்த திரு வசனத்தில் பல நுட்பமான தகவல்களை இறைவன் பொதிந்துள்ளான். அவற்றிலிருந்து நம் சிற்றறிவிற்கு எட்டிய சிலநுட்பங்களை, நுணுக்கங்களை இங்கே பார்ப்போம்.

إِنَّ நிச்சயமாக என்ற வார்த்தையை இறைவன் முற்படுத்தியிருக்கிறான். சந்தேகமற்ற வேதம் என குர்ஆன் ஷரீபை அறிமுகப்படுத்தியிருக்கும் இறைவன் இங்கே நிச்சயமாக என்று கூறி துவங்கியிருப்பது, கூறப்போகும் தகவலின் முக்கியத்துவத்தை


PDF ISLAM

உணர்த்துவதாக அமைகிறது மேலும் இதில் யாரும் சந்தேகிக்கவோ விகர்ப்பம் கற்பிக்கவோ கூடாது என்பதையும் இந்த நிச்சயம் உணர்த்துகிறது.

**اللّٰهُ அல்லாஹ்வும்**

அல்லாஹ் வணக்கத்திற்குரிய இறைவன், அவனைத்தான் அனைத்து அடியார்களும் வணங்கி, வழிபட்டு இபாதத்தின் மூலம் தன் அடிமைத்தனத்தை நிருபிக்க வேண்டும்.

அவன் யாருக்கும் பணியவோ, தலைதாழ்த்தவோ அவசியமற்றவன், யாரிடத்தும் எந்த தேவையு மற்றவன். அடியார்களின் அமல்களை அங்கீகரிக்கக் கூடிய சர்வசக்தியுள்ள இறைவன் தன் விருப்பத்திற் குரிய விஷேச அடியாராகிய முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மீது ஸலவாத்து சொல்வதை தனது அமலாக தேர்ந் தெடுத்து தனக்குத் தானே விதியாக்கி தானே சொல்லி வருகிறான்.

**وَمَلَائِكَتَهُ - இன்னும் அவனது அமரர்களும்**

ஊண், உறக்கம், மறதி, மயக்கம் எதுவுமின்றி, சதாவும் அல்லாஹ்வையே துதித்துக்கொண்டிருக்கும் பரிசுத்த ஆத்மாக்களான வானவர்கள் அல்லாஹ்வை எப்படி துதி செய்து கொண்டிருக்கின்றனரோ அப்படி அருள் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மீதும் ஸலவாத்து கூறிக்கொண்டே யிருக்கின்றனர். மலக்குகளின் முக்கிய வழிபாவே ஸலவாத்தாகத்தான் இருக்கிறது.

يُصَلُّوْنَ ஸலவாத் சொல்லிக்கொண்டு. யுசல்லூன என்ற வாசகம் அரபு மொழி இலக்கணத்தின் அடிப்படையில் அதை اِسْتِمْرَار (நின்று விடாமல்



PDF ISLAM

நிகழ்ந்து கொண்டே இருப்பது) என்று கூறப்படும்.

**முடிவுறாத அமல் ஸலவாத் மட்டுமே**

உலகில் படைப்புகள் அனைத்தும் அல்லாஹ்வை துதித்து, தஸ்பீஹ் செய்து கொண்டிருக்கின்றன, ஒரு நாள் வரும் அந்நாளில் படைப்புகள் அனைத்தும் அழிக்கப்பட்டு விடும்.

படைப்புகள் அனைத்தும் அழிந்த பின் வணக்கங்கள் யாவும் நின்று விடும். ஆனால் படைத்தவனான அல்லாஹ் இருந்து கொண்டே இருப்பான். அவன் இருந்து என்ன செய்து கொண்டிருப்பான் என்பதை يُصَلُّونَ யுஸல்லூன என்ற வாசகம் உணர்த்துகிறது.

எனவே அல்லாஹ் வணங்கப்படுவது முடிவிற்கு வந்தாலும், அல்லாஹ்வால் அருள் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மீது கூறப்படும் ஸலவாத் முடிவு பெறாது,

**عَلَى النَّبِيِّ - நபியின் மீது**

திருமறைக் குர்ஆனில் முந்திய நபிமார்களைப் பற்றிய செய்திகளைக் கூறும் இறைவன், அவர்களின் பெயர்களைக் கூறி யா ஆதம், யா நூஹ், யா இப்ராஹீம் யா மூசா, யா ஈசா, யா யஹ்யா, என அழைக்கிறான்.

அதுபோல மூஸாவின் தாயாருக்கு நாம் சொன்னோம், இப்ராஹிமின் மீது, ஆதமிற்கு, என்றெல்லாம் கூறும் இறைவன். இங்கே நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் பெயரைக் குறிப்பிடாமல் நபியின் மீது என்று கூறியிருப்பதன் மூலம் அருள் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு தனிப்பெரும் கண்ணியத்தை

PDF ISLAM

அல்லாஹூ வழங்கியுள்ளான்.

يَاأَيُّهَا الَّذِينَ اٰمَنُوْا ஓ! ஈமான் கொண்டவர்களே.

இறை மறைக் குர்ஆனில் சுமார் 89 வசனங்களில் இறைவன் இப்படி அழைக்கிறான். எல்லா வசனங்களிலும் அதன் ஆரம்பத்திலேயே இப்படி அழைத்து செய்தியைக் கூறுவதுதான் திருக்குர்ஆனின் சொல்லாட்சி முறை.

அந்த மரபை மாறி இங்கே இந்த வசனத்தில் மட்டும் இடையிலே யா அய்யுஹல்லதீன ஆமனூ என அழைக்கப் படுகிறதெனில் அது நிச்சயம் ஆய்வு செய்யப்பட வேண்டிய அம்சமே ஆகும்.

மற்ற வசனங்களிளெல்லாம் யா அய்யுஹல்லதீன ஆமனூ என்றழைத்து இதைச் செய்யுங்கள் என கட்டளையிடுவான் அல்லது இதைச் செய்யாதீர்கள் என தடை விதிப்பான்.

உதாரணமாக...

ஈமான் கொண்டவர்களே பொறுமையைக் கொண்டும், தொழுகையைக் கொண்டும் உதவி தேடுங்கள். (2-153)

ஈமான் கொண்டவர்களே நாம் உங்களுக்கு வழங்கிய நல்லவற்றிலிருந்தே உண்ணுங்கள். (2:172)

ஈமான் கொண்டவர்களே வட்டியை உண்ணாதீர்கள். (3-130)

ஈமான் கொண்டவர்களே அல்லாஹ்வை அதிகம் நினைவுபடுத்துங்கள். (33-41)

இப்படிக் கூறி வரும் இறைவன், அப்படியே துவங்கி يَاأَيُّهَا الَّذِينَ اٰمَنُوْا صَلُّوا عَلَيْهِ ஈமான் கொண்டவர்களே

(நபி) அவர்கள் மீது ஸலவாத்தும் ஸலாமும் சொல்லிக் கொண்டேயிருங்கள் என சொல்-யிருக்கலாம்.

மாறாக அப்படிக்கூறாமல் தன்னையும், தன் அமரர்களையும் முற்படுத்தி தாம் செய்வதை முன் உதாரணமாகக் காட்டி அதன் பின் அதுபோலவே தன் அடியார்களையும் செய்யப்பணிக்கிறான் இறைவன். அதாவது ஸலவாத்து சொல்லப் பணிக்கிறான்.

ஈமான் கொண்டவர்களே என இங்கே இடையில் அழைத்திருப்பதன் மூலம், ஸலவாத் எத்தகைய சக்தி வாய்ந்த, சொல்லியே தீர வேண்டிய அமல் என்பதை இங்கே உணர முடிகிறது.

மேலும் ஈமான் கொண்டவர்களே என அழைத்துக் கூறப்பட்டதன் மூலம் இது முஃமின்களுக்கும் முனாபிக்குகளுக்கும் - நயவஞ்சகர்களுக்கும் இடையே பிரித்தறிவித்துக் காட்டும் அளவுகோள் எனவும் புரிய வேண்டும்.

**மறுத்தால்?**

அல்லாஹ்வும், அமரர்களும் சொல்வதாக மேற்கோள் காட்டிய பின்னும் ஒருவன் ஸலவாத் சொல்ல மறுத்தால் அவன் காபிராகி விடுவான்,

**மறந்தால்**

நம் மார்க்கத்தில் ஒரு முஸ்லிம் ஒரு தடுக்கப்பட்ட காரியத்தை மறந்து செய்து விட்டாலோ, (உதாரணமாக நோன்பிருக்கும் நிலையில் மறந்து எதையேனும் சாப்பிட்டு விட்டால்) அல்லது செய்ய வேண்டிய ஒரு கடமையை மறந்து செய்யாது விட்டாலோ, அவன் மீது குற்றம் பிடிக்கப்படாது, ஆனால் நினைவு


PDF ISLAM

வந்தவுடன் விட்ட கடமையை நிறைவேற்ற வேண்டும்.

ஆனால் ஒருவன் ஸலவாத் கூற மறந்து விட்டால்?

مَنْ نَسِيَ الصَّلَاةَ عَلَيَّ نَسِيَ طَرِيْقَ الْجَنَّةِ

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் நவின்றார்கள்.

எவனிடமாவது என்னைப்பற்றி கூறப்பட்டு என் மீது அவன் ஸலவாத் சொல்லவில்லையென்றால் அவன் சுவனத்தின் பாதையை மறந்து விட்டான்.

(தப்ரானி, பைஹகி, இப்னு அபீஷைபா அஷ்ஷிபா)

நல்லமல்கள் பல செய்து சுவனவாதியாக அனுமதிக்கப்பட்டாலும், ஸலவாத்தை மறந்துவிட்ட குற்றத்தால் சுவனப்பாதை மறக்கடிக்கப்படும். எனவே மறந்து விட்டாலும் மன்னிக்கப்படாத குற்றம் ஸலவாத்தை விடுதல் அல்லாஹ் நம்மை காப்பானாக.

وَسَلِّمُوا تَسْلِيماً - வஸல்லிமூ தஸ்லீமா

இன்னும் ஸலாமும் சொல்லுங்கள்.

ஸலவாத் மட்டுமின்றி ஸலாம் சொல்லுமாறும் இந்த வசனத்தின் வழியே கட்டளையிடுகிறான்.

எனவேதான் நாம் தொழுகையில் ஸலவாத்தும், ஸலாமும் கூறுகிறோம்.

**தொழுகையில்**

அல்லாஹ்விற்காக தொழுகிறேன் என நிய்யத் செய்து தொழுகையைத் துவங்கும் ஒரு மனிதன் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மீது ஸலவாத் கூறவில்லையெனில் அவனது தொழுகை முற்றுப் பெறாது, என்பதை பின்வரும் சான்றுகள் உறுதிபடுத்துகின்றன.



PDF ISLAM

اَلسَّلَامُ عَلَيْكَ أَيُّهَا النَّبِيّ அஸ்ஸலாமு அலைக்க அய்யுஹன் நபி என்று தொழுகையில் ஸலாம் உரைப்பது பர்ளாகும் என்பது ஷாபியீ மத்ஹபு புகஹாக்களின் தீர்ப்பாகும்.

என் மீது ஸலவாத்தும், அத்தஹிய்யாத்தும் ஓதாத வரையில் தொழுகை நிறைவேறாது என நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் நவின்றார்கள்.

தொழுகையில் அத்தஹிய்யாத்தில் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மீது ஸலவாத் ஓதாதவனின் தொழுகை தொழுகையே அல்ல.

-இபுனு மஸ்ஊத் ரழியல்லாஹு அன்ஹு

தொழுகையில் அத்தஹிய்யாத்தில் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மீதும், அவர்களது குடும்பத்தார்கள் மீதும் நான் ஸலவாத் ஓதாத வரையில் எனது தொழுகை பரிபூரணமாகாது.

-அபூ மஸ்ஊதுல் பத்ரிய்யு ரழியல்லாஹு அன்ஹு

**ஜனாஸா தொழுகையில்?**

மற்ற தொழுகைகளில் அத்தஹிய்யாத் இருப்பில் அமர்வோம் அத்தஹிய்யாத் ஓதியபின் ஸலவாத்தும் ஸலாமும் கூறுவோம். அத்தஹிய்யாத் இருப்பே இல்லாத ஜனாஸா தொழுகையிலும் இரண்டாம் தக்பீரில் ஸலவாத்தையே ஓதவேண்டும்.

**பள்ளியினுள் நுழையும் முன்**

நம் இதய வேந்தர் நபியின் ஈரல் துண்டு பாத்திமா ரழியல்லாஹு அன்ஹா அவர்கள் அறிவித்த ஹதீஸ் களை எங்கேனும் படித்திருக்கிறீர்களா? இதோ படியுங்கள்.



PDF ISLAM

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் பள்ளியினுள் நுழையும்போது.

بِسْمِ اللّٰهِ وَالصَّلَاةُ عَلٰى رَسُوْلِ اللّٰهِ اَللّٰهُمَّ اغْفِرْلِيْ ذُنُوْبِيْ

وَافْتَحْ لِيْ اَبْوَابَ رَحْمَتِكَ

அல்லாஹ்வின் பெயரை முன்னிறுத்தி, அல்லாஹ்வின் ரசூல் (தன்) மீது ஸலவாத்து கூறியவர்களாக.

ரப்பே என் (உம்மத்துக்களின்) பாவங்களை பொறுத்தருள்வாயாக, உனது ரஹ்மத்துடைய வாசல்களை எனக்காக திறந்து விடுவாயாக.

**வெளி வரும்போது...**

பள்ளியிலிருந்து வெளி வரும் போது ஸலவாத்து ஓதியவர்களாக யா அல்லாஹ் உன் சிறப்பின் வாசல்களை எனக்காக திறந்து விடுவாயாக, என ஓதுவார்கள்.

(திர்மிதி, இபுனு மாஜா, பைஹகீ, இபுனு அபீஷைபா, முஸ்னத் அஹ்மத்)

**பாங்கில்**

பாங்கின் முன்னும், இகாமத்தின் முன்னும் ஸலவாத் ஓதுவது சுன்னத் என இமாம் அஷ்ஷெய்கு கபீருல் பக்ரி ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் கூறியுள்ளார்கள். (பத்ஹுல் முயீன்)

பாங்கு முடிந்த பின் ஸலவாத் ஓதியவருக்கு எனது ஷபாஅத் வாஜிபாகி விட்டது என நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் நவின்றார்கள்.

**துஆவில்**

மனிதன் தன் தேவைகளை அல்லாஹ்விடம் முறையிடுகிறான், துஆக் கேட்கிறான். ஆனால்



PDF ISLAM

அவனது துஆவில் ஸலவாத் இடம்பெறவில்லையெனில் அந்த துஆ அங்கீகரிக்கப்படாது,

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் நவின்றதாக ஹழ்ரத் அலி ரழியல்லாஹு அன்ஹு அறிவிக்கிறார்கள்.

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மீது ஸலவாத் சொல்லப்படும் வரை எல்லா துஆக்களும், பூமிக்கும் வானத்திற்கும் இடையில் திரையிடப்பட்டிருக்கும், ஸலவாத் செல்லப்பட்டால் திரை அகன்றுவிடும். அந்த துஆவிற்கு பதில் வழங்கப்படும். ஸலவாத் ஓதப்படாவிட்டால் அந்த துஆவிற்கு பதில் வழங்கப்படாது. (நூல் : பைஹகி)

புழாலத் இபுனு உபைத் ரழியல்லாஹு அன்ஹு அறிவிக்கிறார்கள். நாங்கள் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுடன் அமர்ந்திருந்தோம், ஒருவர் வந்தார், தொழுதார், யா அல்லாஹ் என் பிழைகளைப் பொறுத்து கிருபை செய்வாயாக என துஆச் செய்தார். நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் நவின்றார்கள். தொழுகையாளரே நீர் அவசரப்பட்டு விட்டீர் (எப்போதும்) நீர் தொழுது முடித்தால் அமர்ந்து அல்லாஹ்வைப் புகழக்கூடிய முறையில் புகழ்ந்து என் மீது ஸலவாத்து சொல்-பின்பு துஆச் செய்வீராக, என்றார்கள்.

அடுத்து ஒரு மனிதர் வந்தார், அவர் தொழுது முடித்த பின் அல்லாஹ்வைப் புழ்ந்து ஸலவாத்தும் ஓதினார். அப்போது நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள். தொழுகையாளரே நீர் துஆச் செய்வீராக உமது துஆவிற்கு பதில் வழங்கப்படுவீர் என்றார்கள். (அபூதாவூத், திர்மிதி, இபுனு ஹுஸைமா, இபுனு ஹிப்பான்)


PDF ISLAM

இப்படியாக ஸலவாத் ஸலாமின் அவசியமும் அகமியமும் அனேகம் உள்ளது. சொல்லிளயோ, எழுதியோ, முடிவுறாத பெரும் பொருளாகும், அவற்றிலிருந்து மிகச் சிலவற்றை மட்டுமே உங்களிடையே தொகுத்து வழங்கியுள்ளேன்.

ஆர்வம் உள்ளவர்களுக்கு இதுவே போதும், அல்லாஹ் நமக்கு ஸலவாத் ஸலாம் கூறும் நற்பாக்கியத்தை நல்கி அதன் பொருட்டால் நம் நாட்ட தேட்டங்களை நிறைவேற்றித்தருவானாக ஆமீன், ஆமீன் யாரப்பல் ஆலமீன் பிஹக்கி ரஹமத்தில் -ல் ஆலமீன்.

صَلَّى اللّٰهُ عَلٰى مُحَمَّدٍ يَارَبِّ صَلِّ عَلَيْهِ وَسَلِّمْ

அனஸ் ர-யல்லாஹுு அன்ஹுு அறிவிக்கிறார்கள்.

நீங்கள் தொடர் நோன்பு நோற்காதீர்கள் என நபி ஸல்லல்லாஹுு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறியபோது நீங்கள் தொடர் நோன்பு நோற்கிறீர்களே? என நபித்தோழர்கள் கேட்டனர். அதற்கு நபி ஸல்லல்லாஹுு அலைஹி வஸல்லம் அவர்கள் நான் உங்களில் யாரைப் போன்றும் இல்லை. நிச்சயமாக நான் உண்ணவும் பருகவும் வழங்கப்படுகிறேன். என்றோ உண்ணவும் பருகவும் வழங்கப்பட்டு இரவுப் பொழுதைக் கழிக்கிறேன் என்றோ கூறினார்கள்.

*புகாரி ஷரீப் 1961*



PDF ISLAM

# 2

# இதயத்தில் நிறைந்த இமாம் ஹஸன் ஹுஸைன் ரலியல்லாஹு அன்ஹுமா

முஹர்ரம் மாதம் வந்தாலே இமாம் ஹுஸைன் ரலியல்லாஹு அன்ஹு அவர்களின் நினைவு நம் நெஞ்சங்களை தட்டும், மூடிய இமைகளுக்குள் கண்ணீர் முட்டும். தியாகம் என்ற வார்தைக்கு வாழ்க்கை கொடுத்த வள்ளல் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் வாரிசுகளின் தியாக வரலாறுகளை நாமும் தெரிந்து வைக்க வேண்டும், நம் வாரிசுகளுக்கும் சொல்லி வைக்க வேண்டும்.

ஹுசைன் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள், நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் பேரர்களில் ஒருவரும் அன்னை பாத்திமா ரலியல்லாஹு அன்ஹா அலி இப்னு அபீதாலிப் கர்ரமல்லாஹு வஜ்ஹஹு ஆகியோரின் அன்புப் புதல்வரும் இமாம் ஹஸன் ரலியல்லாஹு அன்ஹு அவர்களின் அருமைச் சகோதரருமாவார்கள்.

ஹிஜ்ரி நான்காம் ஆண்டு ஷஃபான் மாதம் பிறை ஐந்தில் மதீனா முனவ்வராவில் பிறந்தார்கள். இவர்கள் பிறந்த போது நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் தங்களின் அருள் நிறைந்த உமிழ்நீரை அவர்களின் வாயில் வைத்து சுவைக்கச் செய்தார்கள், அவர்களின் வாயில் உமிழ்ந்தார்கள், அவர்களின் காதில் பாங்கு சொன்னார்கள், அவர்களுக்காக துஆப்பிரார்த் தனை செய்தார்கள், அவர்கள் பிறந்து எழாவது நாளில் அவர் களுக்கு 'ஹுசைன் ~~சின்ன~~ அழகர்' என்று பெயரிட்டார்கள், அதே



PDF ISLAM

நாளில் அவர்களுக்காக ஓர் ஆட்டை அறுத்து அகீகா கொடுத்தார்கள். தங்களின் அன்புப் புதல்வி பாத்திமா ரலியல்லாஹூ அன்ஹா அவர்களை அழைத்து குழந்தையின் தலை முடியை மழித்து அதை நிறுத்து அதன் எடைக்கேற்ப வெள்ளியை ஸதகாவாக கொடுங்கள் என்று கூறினார்கள்.

ஹூசைன் ரலியல்லாஹூ அன்ஹூ அவர்கள் மீது நபி ஸல்லல்லாஹூ அலைஹி வஸல்லம் அவர்கள் அதிக அன்பும், இரக்கமும் கொண்டவர்களாக இருந்தார்கள். அதேபோன்று அவர்களின் சகோதரர் ஹஸன் ரலியல்லாஹூ அன்ஹூ அவர்கள் மீதும் அதிக அன்பு,இரக்கம் கொண்டவர்களாக இருந்தார்கள். இவ்விருவரைப் பற்றியும் நபி ஸல்லல்லாஹூ அலைஹி வஸல்லம் அவர்கள் பல சந்தர்ப்பங்களில் புகழ்ந்து கூறியுள்ளார்கள்.

ஒருமுறை இவ்விருவரைப் பற்றியும் நபி ஸல்லல்லாஹூ அலைஹி வஸல்லம் அவர்கள் புகழ்ந்து கூறுகையில் “அல் ஹஸனு வல் ஹூசைனு செய்யிதா ஷபாபி அஹ்லில் ஜன்னாஹ்” ஹஸனும் ஹூசைனும் (ரலியல்லாஹூ அன்ஹூமா) சுவர்க்கத்திலுள்ள வாலிபர்களின் தலை வர்கள் என்று கூறினார்கள்.

இன்னுமொரு சந்தர்ப்பத்தில் நபி ஸல்லல்லாஹூ அலைஹி வஸல்லம் அவர்களிடம் உங்களுடைய குடும்பத்தினரில் உங்களுக்கு மிக விருப்பமானவர்கள் யார்? என்று கேட்கப்பட்டதற்கு ஹஸனும் ஹூசைனும் (ரலியல்லாஹூ அன்ஹூமா) என்று கூறினார்கள். (நூல்– திர்மதி)

இமாம் ஹஸன் ரலியல்லாஹூ அன்ஹூ அவர்கள் நபி ஸல்லல்லாஹூ அலைஹி வஸல்லம் அவர்களின் தலை முதல் நெஞ்சு வரையிலான தோற்ற முடையவர்கள் இமாம் ஹூசைன் ரலியல்லாஹூ அன்ஹூ அவர்கள் நபி ஸல்லல்லாஹூ அலைஹி வஸல்லம் அவர்களின் நெஞ்சு முதல் பாதம்வரையிலான தோற்றமுடையவர்கள். *(நூல் : திர்மிதீ)*



PDF ISLAM

ஒரு முறை நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் பின்வருமாறு கூறினார்கள்.

ஹுசைன் என்னில் நின்றும் உள்ளவர் நான் ஹுசைனில் நின்றும் உள்ளவனாவேன். இறைவா! ஹுசைனை நேசிக்கக் கூடியவர்களை நீ நேசிப்பாயாக.! ஹுஸைன் பேரர்களில் நின்றும் ஒரு பேரர். *(நூல் : திர்மிதி)*

பறாஃ இப்னு ஆஸிப் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் கூறுகின்றார்கள் :

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் தங்களின் தோளில் ஹுஸைன் ரலியல்லாஹு அன்ஹு அவர்களை சுமந்த வண்ணம் வருவதைக் கண்டேன் அப்பொழுது அவர்கள் இறைவா! நான் ஹுசைனை நேசிக்கின்றேன்! நீயும் அவரை நேசிப்பாயாக! என்று கூறினார்கள்.

மேற்கூறபட்ட ஹதீஸ்களில் இருந்து ஹஸன், ஹுஸைன் ரலியல்லாஹு அன்ஹுமா அவர்கள் மீதும் மற்றும் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் குடும்பத்தினர்கள் மீதும் முஹப்பத் நேசம் வைக்க வேண்டியதன் அவசியத்தை அறிய முடிகிறது. இமாம் ஹுசைன் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் அபூ அப்தில்லாஹ் என்ற புனைப்பெயர் கொண்டு அழைக்கப்பட்டார்கள்.

| | | |
|---|---|---|
| அர்ரஷீது | - | நேர்வழி பெற்றவர் |
| அத்தையிப் | - | மணம் நிறைந்தவர் |
| அஸ்ஸகிய்யு | - | தூய்மை யானவர் |
| அல்வபிய்யு | - | நிறைவேற்றி வைக்கக்கூடியவர் |
| அஸ்ஸெய்யித் | - | தலைவர் |
| அல்முபாரக் | - | அருள்செய்யப் பட்டவர் |
| அஸ்ஸிப்து | - | பேரர் |

PDF ISLAM

போன்ற பல பட்டப் பெயர்கள் கொண்டும் அழைக்கப் பட்டார்கள். இவற்றில் அஸ்ஸகிய்யு என்ற பட்டப்பெயர் மிகவும் பிரசித்தி பெற்றதாகும். இமாம் - ஹுஸைன் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் தனது சகோதரர் ஹஸனைப் போன்ற அழகானவர்களாகவும் மார்கப்பற்று நிறைந்தவர்களாகவும் திகழ்ந்தார்கள்.

உள்ளமை ஒன்று என்ற கலிமாவின் தத்துவத்தை மக்கள் மத்தியில் பரப்புவதில் மிகவும் ஆர்வமாக செயல்பட்டார்கள். நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் வபாத்தின் பின் ஸஹாபாக்களில் பெரும்பான்மையினர் உலகில் பல நாடுகளுக் கும் சென்று இஸ்லாத்தின் தத்து வத்தைப் பரப்புவதில் ஈடுபட்டனர்.

இமாம் ஹுஸைன் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் புனித மக்காவில் தங்கி இறை ஞானத்தைப் பரப்புவதில் ஈடுபட்டார்கள்.

முஹர்ரம் மாதம்10ம் நாள் அன்று ஹுஸைன் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் ஷஹீதாக்கப் பட்டார்கள். கசப்பான அந்த வரலாறுகளால் நம் இதயங்கள் மீண்டும் ரணமாகும். அதனாலே அந்த கண்ணீர் வரலாற்றை நினைவுபடுத்துவதை விட கண்ணிய மிகும் அவர்களின் அன்பை நெஞ்சங்களில் விதைப்போம்.

இம்மாதத்தில் உலகெங்கிலும் உள்ள சுன்னத் வல் ஜமாஅத்தினர் அவர்கள் மீது விழா எடுப்பார்கள். அவர்கள் பேரில் மௌலித் ஓதுவார்கள். அவர்கள் பேரில் அன்ன தானம் வழங்குவார்கள். அவர்களைக் கொண்டு தங்களின் தேவைகள் நிறைவேற இறைவனிடம் வஸீலா தேடுவார்கள், நாமும் அவற்றில் திளைப்போம்.

அபூபக்கர் (ரலியல்லாஹு அன்ஹு) அவர்கள் கூறியதாவது

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள்



PDF ISLAM

மிம்பரின் மீது (உரையாற்றியபடி) இருக்க ஹஸன் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் பக்கவாட்டில் அமர்ந்திருந்தார்கள். நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் ஒருமுறை மக்களையும், மறு முறை ஹஸன் ரலியல்லாஹு அன்ஹு அவர்களையும் நோக்கியபடி இந்த எனது (மகளின்) மகன் மக்களின் தலைவர் ஆவார். முஸ்லிம்களின் இரு குழுவினரிடையே இவர் வாயிலாக அல்லாஹ் சமாதானத்தை ஏற்படுத்தவிருக்கிறான், என்று சொல்ல நான் கேட்டேன்.

நூல் : புகாரி ஷரீப் 3746

உஸாமா பின் ஜைத் ரலியல்லாஹு அன்ஹுமா அறிவிக்கிறார்கள்,

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் என்னையும் ஹஸன் ரலியல்லாஹு அன்ஹு அவர்களையும் (கையில்) எடுத்து இறைவா நான் இவ்விருவரையும் நேசிக்கிறேன். நீயும் இவ்விருவரையும் நேசிப்பாயாக எனக் கூறினார்கள்.

நூல் – புகாரி ஷரீப் 3747

உக்பா பின் ஹாரிஸ் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் ஹஸன் ரலியல்லாஹு அன்ஹு அவர்களை தோளில் சுமந்தபடி என் தந்தை உங்களுக்கு அர்ப்பணமாகட்டும். நீங்கள் (உங்கள் பாட்டனார்) நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களைத் தான் (உருவ அமைப்பில்) ஒத்திருக்கிறீர்கள். (உங்கள் தந்தையான) அ- அவர்களை ஒத்திருக்கவில்லை என்று சொல்லக் கண்டேன். அப்போது அ- ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் அதைக் கேட்டு சிரித்துக் கொண்டிருந்தார்கள்.

நூல்: புகாரிஷரீப் 3750


PDF ISLAM

அனஸ ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் அறிவிக்கிறார்கள் ஹஸன் பின் அலி ரலியல்லாஹு அன்ஹு அவர்களைவிட நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை உருவ அமைப்பில் ஒத்தவர்களாக வேறெவரும் இருக்க வில்லை.

ஷுஅபா ரலியல்லாஹு அன்ஹு கூறுகிறார்கள்.

(இராக்வாசி) ஒருவர், அப்துல்லாஹ் பின் உமர் ரலியல்லாஹு அன்ஹு அவர்களிடம் இஹ்ராம் அணிந்தவர் ஈயைக் கொல்வது குறித்து கேட்டார். அதற்கு அவர்கள், இராக் வாசிகள் ஈயைக் (கொல்ல அனுமதி உண்டா இல்லையா என்பது) குறித்து கேட் கிறார்கள். அவர்களோ ஏற்கனவே அல்லாஹ்வின் தூதருடைய மகளின் மகனை (ஹுஸைன் ரழியல்லாஹு அன்ஹு அவர்களை) கொன்று விட்டார்கள். (ஆனால்) நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள், அவர்கள் இருவரும் (ஹஸன் ஹுஸைன் ரலியல்லாஹு அன்ஹுமா) உலகின் இருதுளசி மலர்கள் ஆவர். என்று (அவர்களைக் குறித்து) சொன்னார்கள் எனக்கூறினார்கள்.

நூல்: புகாரி ஹரீப் 3753

---

இறைத்தூதர் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் கூறினார்கள்.

நீங்கள் நோயாளிகளை உடல் நலம் விசாரிக்கச் சென்றால் அல்லது மய்யித்தைப் பார்க்கச் சென்றால் நல்லதையே கூறுங்கள். ஏனென்றால், உங்களுடைய கூற்றுக்கு மலக்குகள் ஆமீன் கூறுகிறார்கள்.

*அறிவிப்பாளர் - உம்மு ஸல்மா ரலியல்லாஹு அன்ஹா அவர்கள் , நூல் - முஸ்லீம் - 919, அபூதாவூத் - 3115, திர்மிதி - 977, இப்னுமாஜா - 1447*

---



PDF ISLAM

# 3

# அருள் நபி
## ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்
# அவர்களின் அரபா உரை

ஹிஜ்ரி 10 ம் ஆண்டு ஹஜ் கடமையை நிறைவேற்ற கூடியிருந்த மாபெரும் கூட்டத்தின் எதார்த்த நிலை.

அங்கு கூடியிருந்தோரின் உள்ளச்சமும் வணக்க வழிபாடு களும் அவர்களின் ஆன்மிக உணர்வுகள் முழுமை அடைந் திருந்ததை வெளிப்படுத்திக் கொண்டிருந்தன.

அரபுலகம் முழுவதிலுமிருந்து சுமார் ஒரு இலட்சத்து இருப தாயிரத்திற்கும் அதிகமானவர்கள் அங்கே குழுமியிருந்தார்கள். அதுவும் ஒரு மகத்தான வணக்கத்தை மகத்தான இறைத்தூதர் முஹம்மது நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர் களுடன் சேர்ந்து நிறைவேற்றுகிற மன மகிழச்சியில் திளைத் திருந்தார்கள்.

இறைத்தூதர் முஹம்மது நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அங்கு வந்திருந்த அனைவரையும் துல்ஹஜ் பிறை எட்டின் நடுபகலுக்குப் பிறகு மக்காவிலிருந்து மினாவிற்கு அழைத்துச் சென்றார்கள். அங்கு ளுஹர், அஸர், மகரிப், இஷா, ஸுப்ஹு ஆகிய தொழுகைகளை முடித்து விட்டு சூரிய உதயத் திற்குப் பின் தோழர்களுடன் அரஃபா நோக்கிப் புறப்பட்டார்கள். அங்கு நமிரா பள்ளத்தாக்கில் நபியவர்களுக்காக கூடாரம் அமைக்கப்பட்டிருந்தது. அதில் சூரியன் உச்சி பொழுதைக் கடக்கும் வரை தங்கி இருந்தார்கள். அதன் பிறகு தமது கஸ்வா ஒட்டகத்தைத் தயார்படுத்தக் கூறி அதில் பயணித்து பத்னுல்வாதி


PDF ISLAM

எனும் பகுதிக்கு வந்தார்கள். அமைதி காத்த நிலையில் அந்த மக்கள் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களைப் பார்த்த படி நிற்க, அதே இடத்தில் தமது ஒட்டகத்தின் மீதமர்ந்த படி நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் ஒரு சொற் பொழிவு ஆற்றினார்கள்.

கூட்டம் பிரமாண்டமாக இருந்ததால் அங்கிருந்தோரிலேயே மிக உரத்த குரல் கொண்டிருந்த ரபீ இப்னு உமய்யா இப்னு கலஃப் ரலியல்லாஹு அன்ஹு அவர்களை அழைத்து தமது பேச்சை எல்லோரும் செவியுறும் விதமாக ஒவ்வொரு வாக்கிய மாய் திரும்பச் சொல்லுமாறு பணித்தார்கள்.

## இறைப்புகழ்

நிச்சயமாக! "எல்லாப் புகழும் அல்லாஹ்வுக்கே அவனையே நாம் புகழ்கிறோம் அவனிடமே நாம் உதவி தேடுகிறோம். நம்முடைய மன இச்சைகளின் கெடுதிகளை விட்டும் நம்முடைய செயல்களின் தீமைகளை விட்டும் அல்லாஹ்விடம் பாதுகாவல் தேடுகிறோம்.

யாருக்கு அல்லாஹ் நேர்வழி காட்டுவானோ அவரை வழிகெடுப்பவர் யாரும் இல்லை. யாரை அல்லாஹ் வழிகேட்டில் விட்டுவிடுவானோ அவரை நேர்வழியில் செலுத்துபவர் யாரும் இல்லை. இன்னும் நான் சாட்சி சொல்கிறேன். அல்லாஹ்வைத் தவிர வணக்கத்திற்குரியவன் யாரும் இல்லை. அவன் தனித்த வன், அவனுக்குக் கூட்டாளி யாரும் இல்லை, மேலும் நான் சாட்சி சொல்கிறேன். நிச்சயமாக முஹம்மது (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவனுடைய அடியாரும் அவனுடைய தூதரும் ஆவார்."

## பிரிவின் முன்னறிவிப்பு

ஓ மக்களே! என்பேச்சை கவனமாகக் கேளுங்கள். இந்த



PDF ISLAM

ஆண்டிற்குப் பிறகு மீண்டும் இந்த இடத்தில் சந்திப்பேனா என்பது எனக்குத் தெரியாது. பிறப்பால் உயர்வு தாழ்வு காட்டாதீர்! மக்களே உங்களது இறைவன் ஒருவனே! உங்களது தந்தையும் ஒருவரே! அறிந்து கொள்ளுங்கள். எந்த ஓர் அரபிக்கும் ஓர் அரபி அல்லாத வரை விடவோ, எந்த ஓர் அரபி அல்லாதவருக்கும் ஓர் அரபியை விடவோ எந்த மேன்மையும் சிறப்பும் இல்லை எந்த ஒரு வெள்ளை யருக்கும் ஒரு கருப்பரை விடவோ எந்த கருப்பருக்கும் ஒரு வெள்ளையரை விடவோ எந்த மேன்மையும் சிறப்பும் இல்லை. இறையச்சம் மட்டுமே ஒருவரின் மேன்மையை நிர்ணயிக்கும் நிச்சயமாக அல்லாஹ்விடத்தில் உங்களில் மிகச்சிறந்தவர் உங்களில் அதிகம் இறைஅச்சம் உள்ளவர்தான்.

## தலைமைக்குக் கீழ்ப்படிவீர்

ஓ மக்களே! அல்லாஹ்வை அஞ்சிக் கொள்ளுங்கள் கருப்பு நிற அபிசீனிய அடிமை ஒருவர் உங்களுக்குத் தலைவராக ஆக்கப்பட்டாலும் அவர் அல்லாஹ்வின் வேதத்தைக் கொண்டு உங்களை வழி நடத்தி அதை உங்களுக்கிடையில் நிலைநிறுத்தும் காலமெல்லாம் அவரது சொல்லைக் கேட்டு நடங்கள். அவருக்குக் கீழ்ப்படியுங்கள்.

## பிறர் உடமையைப் பேணுவீர்

ஓ மக்களே! இந்த துல்ஹஜ் மாதமும் இந்த துல்ஹஜ் 9ம் (அரஃபா) நாளும் இந்த மக்கா நகரமும் எவ்வளவு புனித மானவையோ அப்படியே உயிர்களும் உங்கள் உடமைகளும் உங்கள் மானம் மரியாதைகளும் உங்களுக்குப் புனிதமானவை.

## அராஜகம் செய்யாதீர்கள்

அறிந்து கொள்ளுங்கள்– எனக்குப் பிறகு ஒருவர் மற்றவரின் கழுத்தை வெட்டி மாய்த்துக் கொள்ளும் வழி கெட்டவர்களாய் இறை நிராகரிப்பாளர்களாய் மாறி விடாதீர்கள். உங்களது

இறைவனை நீங்கள் சந்திக்கும் வரை இப்படியே வாழுங்கள். நீங்கள் அனைவரும் தவறாமல் அல்லாஹ்வின் முன்னிலையில் ஆஜராகப் போகிறீர்கள். அப்போது அல்லாஹ் உங்களது செயல் களைப் பற்றி விசாரிப்பான். நான் மார்க்கத்தை உங்களுக்கு எடுத்துரைத்து விட்டேன் உங்களில் எவராவது மற்றவருடைய பொருளின் மீது பொறுப்பேற்றிருந்தால் அதை அவர் உரிய முறையில் அதன் உரிமையாளரிடம் ஒப்படைத்து விடட்டும்.

## பணியாளர்களைப் பேணுவீர்

ஓ மக்களே! முஸ்லிம்கள் அனைவரும் சகோதரர்கள் உங்கள் அடிமைகள் விஷயத்தில் பொறுப்புணர்வோடு நடந்து கொள்ளுங்கள் அவர்களை நன்றாகப் பராமரியுங்கள், நீங்கள் உண்பதையே அவர்களுக்கும் உண்ணக் கொடுங்கள் நீங்கள் உடுத்துவதையே அவர்களுக்கும் உடுத்தச் செய்யுங்கள்.

## அநீதம் அழிப்பீர்

அறியாமையால் அனைத்து விவகாரங்களும் என் பாதங் களுக்குக் கீழ் புதைக்கப்பட்டு விட்டன. மேலும் இன்று வரை யிலான எல்லா வட்டிக் கணக்குகளையும் ரத்துச் செய்து விட்டேன். எனினும் உங்களது மூலதனம் உங்களுக்கே உரியது. வட்டியை அல்லாஹ் தடைசெய்து விட்டான். எனவே முதலில் என் குடும்பத்தைச் சேர்ந்த அப்பாஸ் இப்னு அப்துல் முத்தலிபின் வட்டியைச் செல்லாததாக ஆக்குகிறேன். அறியாமைக்கால இரத்தப் பழிகள் அனைத்தும் ரத்து செய்யப்பட்டு விட்டன. இனி பழைய கொலைக்குப் பழிவாங்கும் உரிமை எவருக்கும் இல்லை. இதில் முதலாவதாக என்குடும்பத்தைச் சேர்ந்த ரபீஆ இப்னு அல்ஹாரிஸ் இப்னு அப்துல் முத்தலிப் கொல்லப்பட்டதற்கான பழிவாங்கலை ரத்துச் செய்கிறேன். அறியாமைக் கால கொலை குற்றத்தில் இதை நான் முதலாவதாக செய்கிறேன்.



PDF ISLAM

## முறைதவறி நடககாதீர்

அறிந்து கொள்ளுங்கள்- குழந்தை விரிப்புக்கே சொந்த மானது (அனுமதிக்கப்பட்ட திருமண உறவுடன் இருக்கும் கணவனுக்கே குழந்தை உரியதாகும்) மணமுடித்துக் கொண்ட பிறகும் விபசாரம் செய்பவர் கல்லெறிந்து கொல்லப்பட வேண்டும். எவர் தம் தந்தை அல்லாதவரை தம்முடைய தந்தையாக அழைக்கிறாரோ, எவர் தம் உரிமையாளர் அல்லாதவருடன் தம்மை இணைத்துக் கொள்கிறாரோ அவர்கள் மீது அல்லாஹ் வுடைய வானவர்களுடைய இன்னும் மக்கள் அனைவருடைய சாபமும் உண்டாகட்டும் அவர்களின் கடமையான உபரியான எந்த வணக்கமும் ஏற்றுக் கொள்ளப்படாது.

## உரிமைகளை மீறாதீர்

ஒரு பெண் தமது கணவரின் வீட்டிலிருந்து அவரது அனுமதியின்றி எதையும் செலவு செய்யக்கூடாது அப்போது உணவையுமா என்று கேட்கப்பட்டது அதற்கு நபி நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் ஆம் அதுதான் நமது செல்வங்களில் மிகச் சிறந்தது என்றார்கள்.

ஓ மக்களே! ஒவ்வொருவருக்கும் சொத்தில் அவரவரின் உரிமைகளை அல்லாஹ் வழங்கி இருக்கின்றான். இனி எவரும் தமது எந்த வாரிசுக்கும் உயில் எழுதக் கூடாது. இரவலாக வாங்கப்பட்ட பொருட்கள் உரியவரிடமே ஒப்படைக்கப்பட வேண்டும். பாலைக் கொண்டு பயன்பெற கொடுக்கப்பட்ட கால்நடைகள் அவற்றின் பயன்பாடு தீர்ந்தவுடன் அவற்றின் உரிமையாளரிடமே திருப்பிக் கொடுக்கப்பட வேண்டும். கடன்கள் நிறைவேற்றப்பட வேண்டும். இழப்பீடுகளை நிறைவேற்ற தலைவனே பொறுப்பாளன்.


PDF ISLAM

## பெண்களை மதிப்பீர்

கவனியுங்கள், பெண்கள் விஷயத்தில் அல்லாஹ்வை அஞ்சிக் கொள்ளுங்கள். அவர்களுக்கு நன்மையே நாடுங்கள். அவர்கள் உங்களுக்குக கட்டுப்பட்டவர்கள் அல்லாஹ்வுடைய அமானிதமாக அவர்களை நீங்கள் பெற்றுள்ளீர்கள் எப்படி உங்கள் மனைவியர் மீது உங்களுக்கு உரிமைகள் இருக் கின்றனவோ அதே போல் உங்கள் மனைவியருக்கும் உங்கள் மீது உரிமைகள் இருக்கின்றன. அவர்கள் உங்களுக்குச் சிறந்த முறையில் பணிவிடை ஆற்றட்டும்.

அவர்களுக்குரிய கடமை என்னவென்றால் நீங்கள் எவரை விரும்ப மாட்டீர்களோ அவரை அவர்கள் வீட்டுக்குள் அனுமதிக் காமல் இருக்கட்டும், இன்னும் மானக்கேடான செயலைச் செய்யாமல் இருக்கட்டும். அவர்கள் குற்றம் புரிந்தால் அவர்களைத் தண்டிக்கிற உரிமையும் உங் களுக்கு உண்டு. அது அவர்களை இலேசாக காயம்படாதபடி அடிப்பதாகும். அவர் களுக்கு ஒழுங்கான முறையில் உணவும், உடையும் வழங்குங்கள். அவர்களுக்கு நன்மையை நாடுங்கள் அவர்கள் உங்களின் உதவியாளர்களாகவும்,உங்களைச் சார்ந்தவர் களாகவும் இருக்கிறார்கள். அல்லாஹ்வின் பெயரை முன் மொழிந்தே நீங்கள் அவர்களுடன் மணவாழ்க்கை மேற் கொண்டுள்ளீர்கள்.

## இரண்டைப் பின்பற்றுவீர்

மக்களே! சிந்தித்துப் புரிந்து கொள்ளுங்கள். எனது பேச்சை கவனமாகக் கேட்டுக் கொள்ளுங்கள். நான் எனது பிரச்சாரத்தை உங்களுக்கு எடுத்துரைத்து விட்டேன். உங்களிடையே அல்லாஹ் வின் வேதத்தையும், அவனது தூதரின் வழிமுறையும் விடு கிறேன். நீங்கள் அவற்றைப் பின்பற்றினால் ஒருபோதும் வழிகெட மாட்டீர்கள்.



PDF ISLAM

## எச்சரிக்கையாக இருப்பீர்

மக்களே உங்களது இந்த நகரத்தில், தான் வணங்கப் படுவதைப் பற்றி ஷைத்தான் நம்பிக்கை இழந்து விட்டான். ஆனாலும் அவன் மகிழ்ச்சியுறும் விதமாய் நீங்கள் அற்பமாக கருதும் சில விஷயங்களில் அவனுக்கு நீங்கள் கீழ்ப்படிவீர்கள், ஆகவே உங்களது மார்க்க விஷயத்தில் அவனிடம் எச்சரிக்கை யாக இருந்து கொள்ளுங்கள்.

இன்னும் மகா பொய்யன் தஜ்ஜாலைப் பற்றியும் உங்களுக்கு எச்சரிக்கிறேன். அல்லாஹ் அனுப்பிய எந்த இறைத்தூதரும் (அவனைப் பற்றித்) தம் சமுதாயத்தாரை எச்சரிக்காமல் இருந்ததில்லை (இறைத் தூதர் ) நூஹ் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் தம் சமுதாயத்தாருக்கு அவனைப் பற்றி எச்சரித் தார்கள். அவர்களுக்குப் பின்னால் வருகை தந்த இறைத் தூதர்களும் எச்சரித்தார்கள். மேலும் என் சமுதாயத்தினரான உங்களிடையே தான் (இறுதிக் காலத்தில் ) அவன் தோன்றுவான் அவனது (அடையாளத்) தன்மைகளில் எதேனும் சில உங் களுக்குப் புலப்படாமல் போனாலும் நிச்சயமாக உங்களுடைய இறைவன் உங்களுக்குத் தெரியாதவனல்லன் என்பது உங்களுக்கு நன்றாகவே தெரியும் உங்கள் இறைவன் ஒற்றைக் கண் உடையவன் அல்லன், அவனோ (தஜ்ஜாலோ) வலது கண் குருடானவன் அவனது கண் ஒரே குலையில் துருத்திக் கொண்டிருக்கும் திராட்சை போன்று இருக்கும்

## இறை ஏற்பாட்டை மாற்றாதீர்

(மாதத்தின் நாட்களை தன் இஷ்டப்படி) முன் பின்னாக்குவ தெல்லாம் இறை நிராகரிப்பை அதிகரிக்கும் செயலாகும். அதனால் நிராகரிப்பவர்கள்தான் வழிகெடுக்கப்படுகிறார்கள். ஏனென்றால் அவர்கள் தங்கள் இஷ்டப்படி மாதங்களை முன் பின்னாக்கி ஒர் ஆண்டில் அம்மாதங்களில் போர் புரிவதை


PDF ISLAM

ஆகுமாக்கிக் கொள்கிறார்கள். மற்றோர் ஆண்டில் அதே மாதங்களில் போர் புரிவது கூடாது என்று தடுத்து விடுகிறார்கள். இவ்வாறு அவர்கள் செய்வதன் நோக்கமெல்லாம் தாங்கள் தடுத்திருக்கும் மாதங்களின் எண்ணிக்கையை அல்லாஹ் தடுத்திருக்கும் மாதங்களின் எண்ணிக்கைக்குச் சரியாக்கி அல்லாஹ் தடுத்திருக்கும் மாதங்களையும் தாங்கள் ஆகுமாக்கிக் கொள்வதற்குத்தான் (அல்குர் ஆன் 9:37)

அறிந்து கொள்ளுங்கள்- நிச்சயமாக காலம் வானங்களையும் பூமியையும் அல்லாஹ் படைத்த அன்றிருந்த அதன் அமைப்பைப் போன்றே இப்போதும் சுற்றிவருகின்றது. அல்லாஹ் விடத்தில் மாதங்களின் எண்ணிக்கை பன்னிரண்டாகும். இப்படித்தான் வானங்களையும், பூமியையும், அல்லாஹ் படைத்த அன்று அவனது புத்தகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது. அவற்றில் நான்கு மாதங்கள் சங்கைக்குரியன மூன்று தொடர்ந்து வருபவை அவை துல்கஅதா, துல்ஹஜ்,முஹர்ரம் நான்காவது ஜுமாதல் உலாவிற்கும் ஷஅபானிற்கும் இடையில் உள்ள ரஜப் ஆகும்.

## சகோதரம் பேணுவீர்

ஒவ்வொரு முஸ்லிமும் மற்ற முஸ்லிமுக்குச் சகோதரர் ஆவார். முஸ்லிம்கள் அனைவரும் சகோதரர்களே!

ஒரு முஸ்லிமின் பொருள் பிறருக்கு அறவே ஆகுமானதல்ல மனமுவந்து கொடுத்தாலே தவிர, உங்களுக்கு நீங்கள் அநீதம் இழைத்துக் கொள்ளாதீர்கள்.

## சொர்க்கம் செல்ல இதுதான் வழி

ஓ மக்களே! உங்கள் இறைவனையே வணங்குங்கள். உங்கள் இறைவனுக்கே பயந்து கொள்ளுங்கள். கடமையான ஐவேளைத் தொழுகைகளையும் தவறாது பேணுங்கள் (ரமழானில்) நோன்பு நோற்று வாருங்கள். விருப்பமுடன் ஜகாத் கொடுத்து



PDF ISLAM

விடுங்கள். அல்லாஹ்வின் இல்லத்தை ஹஜ் செய்யுங்கள் உங்களின் அதிகாரம் உடையோருக்குக் கட்டுப்பட்டு நடங்கள். நீங்கள் சொர்க்கம் செல்வீர்கள்.

## குற்றவாளியே தண்டிக்கப்படுவர்

ஒருவர் குற்றம் செய்தால் அதற்கான தண்டனை அவருக்கே கொடுக்கப்படும். மகனுடைய குற்றத்திற்காக தந்தையோ தந்தையின் குற்றத்திற்காக மகனோ தண்டிக்கப்பட மாட்டார். இஸ்லாம் முழுமையாகி விட்டது.

ஒவ்வோரு இறைத்தூதரின் பிராத்தனையும் இவ்வுலகிலேயே முடிந்து விட்டன. என் பிரார்த்தனையைத் தவிர நான் அதை மறுமை நாளுக்காக என் இறைவனிடம் சேமித்து வைத்திருக் கிறேன். அறிந்து கொள்ளுங்கள் – மறுமை நாளில் இறைத் தூதர்கள் தங்களது சமுதாயத்தினர் அதிகமாக இருப்பதைக் கண்டு மகிழ்ச்சியுறுவார்கள். அப்போது என்னை நீங்கள் கேவலப்படுத்தி விடாதீர்கள். நான் உங்களுக்காக கவ்ஸர் நீர் தடாகத்திற்கு அருகில் உட்கார்ந்திருப்பேன்.

மக்களே ! எனக்குப்பின் எந்த ஓர் இறைத்தூதரும் இல்லை உங்களுக்குப்பின் எந்த ஒரு சமுதாயமும் இல்லை. இங்கு வந்திருப்பவர்கள் வராதவர்களுக்கு இந்த வழிகாட்டல்களை எடுத்துச் சொல்லட்டும். விஷயம் சென்று சேருபவர்களில் சிலர் நேரடியாக கேட்பவரைவிட நன்கு விளங்கும் தன்மை உடையவராக இருக்கலாம்.

பிறகு நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மக்களை நோக்கி மறுமை நாளில் உங்களிடம் என்னைப் பற்றி விசாரிக்கப்படும்போது நீங்கள் என்ன சொல்வீர்கள் என்று கேட்டார்கள். அதற்கு மக்கள் நீங்கள் மார்க்க போதனைகள் அனைத்தையும் எங்களிடம் தெரிவித்து விட்டீர்கள். சமுதாயத் திற்கு நன்மையை நாடினீர்கள் என நாங்கள் சாட்சியம்


PDF ISLAM

பொருளடக்கம்
அளிப்போம் என்றார்கள். உடனே அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் தமது ஆட்காட்டி விரலை வானை நோக்கி உயர்த்தி சைகை செய்துவிட்டுப் பிறகு அதை மக்களை நோக்கித் தாழ்த்தி இறைவா! இதற்கு நீயே சாட்சி, இறைவா! இதற்கு நீயே சாட்சி, இறைவா இதற்கு நீயே சாட்சி! என்ற முடித்தார்கள். இவ்வாறு அவர்கள் கூறிய அதே இடத்தில் அல்லாஹ்வின் புறத்திலிருந்து கீழ் வருமாறு இறைவசனம் இறங்கியது.

இன்றைய தினம் உங்களுக்காக உங்களுடைய மார்க்கத்தை முழுமையாக்கி விட்டேன். மேலும் நான் உங்கள் மீது என் அருட்கொடையைப் பூர்த்தியாக்கி விட்டேன். இன்னும் உங்களுக்காக நான் இஸ்லாம் மார்க்கத்தையே தேர்ந்தெடுத்து கொண்டேன். (அங்கீகரித்துக் கொண்டேன்).

## இருளில் இருந்து ஒளியை நோக்கி

ஒரு முறை மாநபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் ஸஹாபிகளிடையே வந்து கடந்த இரவில் தாம் கண்ட அதிசய நிகழ்வுகளைக் குறித்து கூறினார்கள் அதில் ஒன்று,

என் உம்மத்தில் ஒரு மனிதரை இருளில் இருக்கக் கண்டேன். முன்னும், பின்னும், வலதும் இடதும், மேலும், கீழும், இருள் நிறைந்த நிலையில் தடுமாறியவராக இருந்தார்.

அவர் செய்த ஹஜ்ஜும், உம்ராவும் அங்கு வந்து அவரை இருளிலிருந்து வெளியேற்றி ஒளியில் சேர்த்தது.

*அறிவிப்பாளர் - அப்துர் ரஹ்மான் இப்னு ஸம்ரா ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் நூல் - தப்ரானி.*



PDF ISLAM

# 4

# நபி வழியில்
# மவ்லித்– தர்கா – உரூஸ் – தாயத்து

## மவ்லித் ஓதுதல்

இறைத்தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை ஹஸ்ஸான் இப்னு ஸாபித் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் புகழ்ந்து படித்தார்கள்.

அறிவிப்பாளர் : ஆயிஷா ரலியல்லாஹு அன்ஹா

நூல் : புகாரீ எண் : 6150, முஸ்லிம் எண் : 4545

## பள்ளிவாசலில் மவ்லித்:

இறைத்தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் ஹஸ்ஸான் இப்னு ஸாபித் ரலியல்லாஹு அன்ஹு அவர்களுக்கு பள்ளிவாசலில் ஒரு மிம்பர் படியை அமைத்துக் கொடுத்தார்கள். ஹஸ்ஸான் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் அதில் நின்று கொண்டு இறைத்தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை புகழ்ந்து பாடுவார்கள்.

இறைத்தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்:

ஹஸ்ஸான் (ரலியல்லாஹு அன்ஹு) அவர்கள் என்னை புகழும் காலமெல்லாம் அல்லாஹ் ஜிப்ரீல் அலைஹிஸ்ஸலாம் அவர்களின் மூலமாக அவரை உறுதிப்படுத்துவான்.

அறிவிப்பாளர் : ஆயிஷா ரலியல்லாஹு அன்ஹா

நூல்:அபூதாவூத் எண்:4361, திர்மிதீ எண் : 2773, அஹ்மத் எண்:23300


PDF ISLAM

(பள்ளிவாசலில் மவ்லித் ஓதப்பட்டது என்பதிலிருந்து பொது மக்கள் ஒன்றுகூடும் இடங்களில் மவ்லித் ஓதுவது சிறந்தது என்று விளங்குகிறோம். தர்காவும் பொதுமக்கள் ஒன்றுகூடும் இடமாகும்.)

**வலிமார்கள் மவ்லித்:**

ருபய்யிஃ பின்த் முஅவ்விஃத் ரலியல்லாஹு அன்ஹா அவர்கள் அறிவிக்கிறார்கள்;

எனது திருமண வைபவத்தின்போது இறைத்தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் எனது இல்லம் வந்தார்கள். அப்போது, அங்கிருந்த சிறுமிகள் பத்ர் யுத்தத்தில் ஷஹீதாக்கப்பட்ட நபித்தோழர்களை புகழ்ந்து பாடிய வண்ணம் தஃப் அடித்துக் கொண்டிருந்தார்கள்.

நூல் : புகாரீ எண் : 4001

**இறந்தோருக்கு யாஸீன் ஓதுதல்:**

நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் நவின்றார்கள்:

உங்களில் மரணித்தோருக்கு யாஸீன் ஓதுங்கள்!

அறிவிப்பாளர் : மஃகில் இப்னு யசார் ரலியல்லாஹு அன்ஹு
நூல்:அபூதாவூத் எண்:2714, இப்னுமாஜா எண்:1438, அஹ்மத் எண்:19416

**உருஸ் கொண்டாடுதல் :**

இறைத்தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்:

உங்களில் மரணித்தோர்களின் நல்லவைகளை நினைவு கூறுங்கள்!

அறிவிப்பாளர் : இப்னு உமர் ரலியல்லாஹு அன்ஹு
நூல் : அபூதாவூத் எண் : 4254, திர்மிதீ எண் : 940



PDF ISLAM

## உணவுப் பொருள் வைத்து துஆ ஓதுதல் :

தபூக் யுத்த சமயத்தில் கடும்பசி ஏற்பட்டபோது, அருமைத் தோழர்கள் கேட்டார்கள்:

யா ரஸூலல்லாஹ்! தாங்கள் அனுமதி வழங்கினால் எங்கள் ஒட்டகங்களை அறுத்து நாங்கள் உண்டு கொள்கிறோம்.

இறைத்தூதர் ஸல்லல்லாஹூ அலைஹி வஸல்லம் அவர்கள், (அவ்வாறே) செய்து கொள்ளுங்கள் எனக் கூறியபோது, உமர் ரலியல்லாஹூ அன்ஹூ அவர்கள் யா ரஸூலல்லாஹ்! அவ்வாறு செய்தால் வாகனங்கள் குறைந்துவிடும். எனவே, அவர்களிடமுள்ள உணவுப் பொருட்களை வரவழைத்து அவற்றில் பரக்கத்துக்காக துஆ செய்யுங்கள்! அல்லாஹ் அதில் அருள் செய்வான் என்று கருத்து தெரிவித்தார்கள்.

இறைத்தூதர் ஸல்லல்லாஹூ அலைஹி வஸல்லம் அவர்கள் ஒரு விரிப்பை விரித்து, அவர்களிடமுள்ள உணவுப்பொருட்களை கொண்டுவந்து போடும்படி கூறினார்கள். சிலர் தானியங்களை யும், சிலர் பேரீத்தம் பழங்களையும் இன்னும் சிலர் ரொட்டித் துண்டுகளையும் கொண்டு வந்தார்கள். விரிப்பில் சிறிது உணவே சேர்ந்தது.

இறைத்தூதர் ஸல்லல்லாஹூ அலைஹி வஸல்லம் அவர்கள் உணவுப் பொருளில் பரக்கத்துக்காக துஆ ஓதினார்கள். பின்பு கூறினார்கள்: உங்கள் பாத்திரங்களில் எடுத்துக் கொள்ளுங்கள்!

ஸஹாபாபெருமக்கள் தங்கள் பாத்திரங்களை கொண்டு வந்தார்கள். படைமுகாமில் இருந்த எல்லா பாத்திரங்களிலும் உணவை நிரப்பினார்கள். அவர்களும் வயிறு நிறைய சாப்பிட்டார்கள். மேலும், உணவுப் பொருள் மீதமிருந்தது.

அறிவிப்பாளர் : அபூஹுரைரா ரலியல்லாஹூ அன்ஹூ,

நூல் : முஸ்லீம் எண் : 40


PDF ISLAM

பொருளடக்கம்

அபூஹுரைரா ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் கூறுகிறார்கள்,

நான் சில பேரீத்தங்களை கொண்டுவந்து, யா ரஸூலல்லாஹ்! இப்பழங்களில் பரக்கத்திற்காக அல்லாஹ்விடத்தில் துஆ செய்யுங்கள்! என்று வேண்டுகோள் வைத்தேன்.

இறைத்தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அக்கனிகளை ஒன்று சேர்த்து வைத்துக் கொண்டு பரக்கத்திற்காக துஆ ஓதினார்கள். பிறகு கூறினார்கள்:

(அபூஹுரைராவே!) இக்கனிகளை உங்கள் பையில் வைத்துக் கொள்ளுங்கள்! நீங்கள் விரும்பும்போது கையை உள்ளே விடுங்கள்! கனியை எடுங்கள்! அப்பையை விரித்து விடாதீர்கள்!

அந்தப் பையை எப்போதும் என்கூடவே வைத்திருந்தேன். நாங்களும் சாப்பிடுவோம். பிறருக்கும் கொடுப்போம். அப்பை என் இடுப்பிலேயே இருந்தது. உஸ்மான் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் ஷஹீதாக்கப்பட்டபோது அது காணாமல் போய்விட்டது.

நூல் : திர்மிதீ எண் : 3774

### ஆடு அறுத்து வலிமார்களுக்கு நன்மை சேர்த்தல்:

இறைத்தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கொம்புள்ள செம்மறி ஆடு ஒன்றை கொண்டுவரச் செய்து, ஆயிஷாவே! கத்தியை எடுத்து கல்லிலே தீட்டு! என்று கூறினார்கள். ஆயிஷா ரலியல்லாஹு அன்ஹா அவர்களும் அவ்வாறே செய்தார்கள்.

பின்பு இறைத்தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கத்தியை எடுத்து ஆட்டை படுக்கப் போட்டு அறுத்தார்கள். (அப்போது) கூறினார்கள்:



PDF ISLAM

இறைவனின் பெயர்கொண்டு அறுக்கிறேன். இறைவனே! என்னிடமிருந்தும், என் குடும்பத்திடமிருந்தும் மற்றும் என் உம்மத்திடமிருந்தும் (இதை) ஏற்றுக்கொள்வாயாக! (இவ்வாறு கூறிய) பின் உழ்ஹிய்யா கொடுத்தார்கள்.

அறிவிப்பாளர் : ஆயிஷா ரலியல்லாஹு அன்ஹா
நூல் : முஸ்லீம் எண் : 3637

ஹஜ்ஜுப் பெருநாளில் ஈத்கா மைதானத்தில் இறைத்தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுடன் இருந்தேன். குத்பா சொற்பொழிவை முடித்துவிட்டு மிம்பரிலிருந்து இறங்கினார்கள்.

பிறகு ஒரு செம்மறி ஆடு கொண்டு வரப்பட்டது. இறைத்தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அந்த ஆட்டை அறுக்கும்போது கூறினார்கள்:

அல்லாஹ்வின் பெயரால் உழ்ஹிய்யா கொடுக்கிறேன். அல்லாஹ் மிகப் பெரியவன். எனக்காகவும், என் உம்மத்தில் உழ்ஹிய்யா கொடுக்க இயலாதவர்களுக்காகவும் இந்த உழ்ஹிய்யாவை கொடுக்கிறேன்.

அறிவிப்பாளர் : ஜாபிர் இப்னு அப்தில்லாஹ் ரலியல்லாஹு அன்ஹு
நூல் : அபூதாவூத் எண் : 2427, திர்மிதீ எண் : 1441

ஹனஷ் ரலியல்லாஹு அன்ஹு அறிவிக்கிறார்கள் :

அலீ ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் இரண்டு செம்மறி ஆடுகளை உழ்ஹிய்யா கொடுப்பதைப் பார்த்த நான் என்ன இது? எனக் கேட்டேன். அவர்கள் கூறினார்கள்:

இறைத்தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள், அவர்களுக்காக உழ்ஹிய்யா கொடுக்க வேண்டுமென்று


PDF ISLAM

...ன்னிடம் வஸிய்யச் செய்தார்கள். ஆகவே, அவர்களுக்காக (ஒன்றை) உழ்ஹிய்யா கொடுக்கிறேன்.

நூல் : அபூதாவூத் எண் : 2408, திர்மிதீ எண் : 1415

**தாயத்து அணிதல் :**

திடுக்கிட்டு பயந்தால் ஓதுவதற்குண்டான துஆவை இறைத்தூதர் ஸல்லல்லாஹு அலைஹி ஸல்லம் அவர்கள் ஸஹாபா பெருமக்களுக்கு கற்றுக் கொடுத்தார்கள்.

அவூஃது பி கலிமாதில்லாஹித் தாம்மா மின் ஙழபிஹீ வ ஷர்ரி இபாதிஹீ வ மின் ஹமஸாதிஷ்ஷயாதீனி வ அன் யஹ்ழுரூன்.

(பொருள்: இறை கோபம், இறையடியார் தீங்கு, ஷைத்தான் களின் தாக்குதல் மற்றும் வருகை ஆகியவற்றிலிருந்து பூரணமான அல்லாஹ்வின் வார்த்தைகளின் மூலம் பாதுகாப்புத் தேடுகிறேன்.)

அப்துல்லாஹ் இப்னு அம்ர் ரலியல்லாஹ் அன்ஹு அவர்கள் விவரமுள்ள தங்கள் பிள்ளைகளுக்கு இந்த துஆவை கற்றுக் கொடுப்பார்கள். விவரமில்லா பிள்ளைகளுக்கு இதை எழுதி கழுத்தில் கட்டிவிடுவார்கள்.

அறிவிப்பாளர் : அபூஷுஐப் ரலியல்லாஹு அன்ஹு

நூல் : அபூதாவூத் எண் : 3395, திர்மிதீ எண் : 3451

நீங்கள் மண்ணறைகளுக்குச் சென்றால் அல்ஹம்து ஸூராவை இன்னும் குல்ஹுவல்லாஹு அஹத், குல் அவூது பிரப்பில் பலக் குல் அவூது பிரப்பின்னாஸ் ஆகிய ஸூராக்களை ஓதுங்கள். அவற்றின் நன்மைகள் மண்ணறைவாசிகளுக்கு நிச்சயம் போய் சேர்கிறது.

*இமாம் அஹ்மத் இப்னு ஹன்பல் (ரஹ்மத்துல்லாஹி அலைஹி) அவர்கள். நூல் - முங்னீ*



PDF ISLAM

# 5

# கூடு, கொடி கூடுமா?

வலிமார்களின் தர்காக்களிலும், அவர்களின் சங்கை மிகு நினைவு தளங்களிலும், அவர்களின் உரூஸ் நாட்களில் கொடியேற்றப்படுவதும், அந்த விழாக்களில் மக்கள் கூடுவதும் இன்றளவும் நடந்து வருகிற நடைமுறையாகும்.

விஷயம் இவ்வாறிருக்க, சமீப காலமாக நம்மிடையே உருவாகிய சிலர் தர்காக்களில் கொடி ஏற்றுவது கூடாது என்றும் , கொடி ஏற்றுவதற்கு எந்த ஆதாரமும் இல்லை என்றும்தங்களின் தவறான கொள்கைகளை மக்களிடையே பரப்பி வருகின்றனர். அவர்களின் தவறான கொள்கைகளால் ஈர்க்கப்பட்ட நம்மில் சிலரும் அது குறித்து நம்மிடையே கேள்வி எழுப்பி வருகின்றனர்.

எனவே அவர்களுக்கு தெளிவு கூறுவதற்காக இந்த கட்டுரையைத் தருகிறோம். அதற்கான வரலாற்று ஆதாரங்களை இங்கே வரிசை படுத்தி தருகிறோம்.

இபுனு அப்பாஸ் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் அறிவிக்கிறார்கள்,

பூமான் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடம் கருநிறத்தாலும், வெண்மையாலுமான இரண்டு கொடிகள் இருந்தன. கருப்பு நிறக் கொடி பெரியதாகவும், வெந்நிற கொடி சிறியதாகவும் இருந்தது .

நூல் ; திர்மிதி, இப்னு மாஜா, மிஷ்காத்

ஜாபிர் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் அறிவிக்கிறார்கள்.

நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் புனித மக்காவை வெற்றி கொண்டு உள்ளே நுழைந்த போது அவர்களது கரத்தில் வெண்மைக் கொடி இருந்தது.

(நூல் திர்மிதி, இப்னு மாஜா , மிஷ்காத்)



PDF ISLAM

ஆயிஷா ரழியல்லாஹு அன்ஹா அவர்கள் அறிவிக்கிறார்கள். நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் கொடி வெண்மையானதாக இருந்தது. (ஹாஹுரல் கன்ஸ்)

அருள் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களே கொடிகளை தயார் செய்து அவற்றை யுத்த களங்களிலும், உடன்படிக்கைகளின் போதும், ஸஹாபிகளை தளபதிகளாக நியமித்து அவர்களின் கைகளிலே கொடுத்த நிகழ்வுகள் நிறையவே உண்டு. அவற்றிலிருந்து சில தகவல்கள்.

## பத்ருப் போர்

பத்ரு போரில் முஹாஜிர்களில் ஹழ்ரத் அலி ரழியல்லாஹு அன்ஹு அவர்களும் அன்ஸார்களில் ஹழ்ரத் ஸஅதுப்னு உபாதா ரழியல்லாஹு அன்ஹு அவர்களும் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் கொடியை ஏந்தி நின்றனர். (தஃப்ஸீர் ஆலூஸி பாகம் எண் 3:12)

## கைபர் போர்

நம்பச் செய்து நயவஞ்சகம் செய்யும் யூதர்களின் சூது மதியை வென்றிட கைபர் என்னும் இடத்தில் யுத்தம் காண நேர்ந்தது. கமூஸ் என்னும் கோட்டையை வென்றிட சங்கல்பம் கொண்ட நபியவர்கள் ஒரு திட்டம் தீட்டினார்கள். அன்று இரவே அதை பிரகடனம் செய்தார்கள். அந்த பிரகடனம் இது தான். நான் நாளை ஒருவரின் கையில் கொடியை கொடுப்பேன் அல்லாஹ் அவரின் கையில் வெற்றியைக் கொடுப்பான்.

அதாவது யார் கையிலே நான் கொடியை கொடுப்பேனோ அவர் கையிலே தான் அல்லாஹ் வெற்றியைக் கொடுப்பான். இப்படியும் எடுத்துக் கொள்ளலாம். அல்லாஹ் யாரின் கையிலே வெற்றியைக் கொடுப்பானோ அவர் கையிலேதான் நான் கொடியைக் கொடுப்பேன். இப்படியும் எடுத்துக் கொள்ளலாம்.



PDF ISLAM

அதாவது அல்லாஹ்வின் எண்ணமும் அண்ணல் நபிகளாரின் எண்ணமும் ஒன்றை விட்டு ஒன்று மாறுபட்டதல்ல.

வெற்றியின் அடையாளமாய் வேந்தர் நபிகள் கொடியை குறிப்பிட்டதை நாம் கவர்ந்து கவனிக்க வேண்டும். அந்த கொடி ஹழ்ரத் அலி ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் வசம் வழங்கப்பட்டது. (புகாரி)

## மூத்தா போர்

சிரியா நாட்டைச் சார்ந்த புஸ்ராவின் சிற்றரசரான ஷிர்ஜீல் என்பவனை இஸ்லாத்தின் பால் அழைக்க கடிதம் ஒன்றை எழுதி அதை நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் ஒரு தூதரிடம் கொடுத்தனுப்பினார்கள்.

தூதர்களை கௌரவிக்க வேண்டும் என்ற நாகரீகத்தை கூட அறியாத அந்த கோழை அரசன் தூது சென்றவரை கொலை செய்து விட்டான். தான் அனுப்பிய தூதர் கொல்லப்பட்டு விட்ட தகவல் அறிந்ததும் கொதித்தெழுந்தார்கள் கோமான் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள்.

மூத்தா எனும் இடம் நோக்கி போர் தொடுக்க படை திரட்டினார்கள் வெள்ளைக் கொடி ஒன்றை எடுத்து ஸைத் இப்னு ஹாரிதா ரழியல்லாஹு அன்ஹு அவர்களின் கையிலே கொடுத்தார்கள்.

ஸைத் இப்னு ஹாரிதா ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் ஷஹீதாக்கப்பட்டால் ஜஅஃபர் இப்னு அபீதாலிப் ரழியல்லாஹு அன்ஹு அவர்களையும் அவர்களும் ஷஹீதாக்கப்பட்டால் அப்துல்லாஹ் இப்னு ரவாஹா ரழியல்லாஹு அன்ஹு அவர்களையும் நியமித்து, அவர்களும் ஷஹீதாக்கப்பட்டால் வீரர்களே ஒன்று கூடி ஒரு தளபதியை நியமிக்குமாறும் கூறியனுப்பினார்கள்.

அனைத்தும் அறிந்த அண்ணல் நபி ஸல்லல்லாஹு



PDF ISLAM

அலைஹி வஸல்லம் அவர்களின் அறிவிப்பின் படியே அனைத்தும் அரங்கேறின நடந்தேறின. ஒருவர் பின் ஒருவராக உயிரிழக்க நேர்ந்த போதும் கொடி வீழ்ந்து விடாமல் பாய்ந்து வந்து கொடியை புஜங்களால் ஏந்தி புனிதம் காத்தார்கள் அந்த புண்ணியர்கள்.

## தாதுஸ் ஸலாஸில் போர்

ஹுதைபியா உடன்படிக்கைக்குப்பின் (கி.பி.629 அக்டோபர்) நடைபெற்ற இந்தப் போரில் அம்ருப்னு ஆஸ் ரலியல்லாஹு அன்ஹு அவர்களை தளபதியாக நியமித்த நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள், அவர்களின் வெந்நிற கொடியைக் கொடுத்தார்கள்.

அன்றிலிருந்து சில தினங்களுக்கு முன்னரே இஸ்லாத்தைத் தழுவியிருந்த ஹழ்ரத் காலித் இப்னு வலீத் ரலியல்லாஹு அன்ஹு அவர்களை இரண்டாம் தளபதியாக நியமித்து, கருப்பு நிற கொடியொன்றை அவர்களிடம் கொடுத்து நீங்கள் மறுபக்கம் செல்லுங்கள் உங்களிடம் எதிரிகள் நெருங்கி வந்த பின்பு தான் நீங்கள் தற்காப்பு யுத்தம் புரிய வேண்டும் என்று கூறி துஆ செய்து அனுப்பினார்கள்.

## மக்கா வெற்றி

ஹிஜ்ரி 8ம் ஆண்டு ரமழான் மாதம் 20ம் நாள் கி.பி. 630 ஜனவரி முதல் தேதி பத்தாயிரம் தோழர்கள் புடை சூழ பூமான் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் வெற்றி வீரராக புனித மக்காவினுள் நுழைந்தார்கள்.

குதைத் என்ற இடம் வந்ததும் குழுக்களையும், கோத்திரத்தார் களையும் அறிந்து கொள்ளும் வகையில் எட்டு குழுவினர் களுக்கு சுமார் 17 கொடிகளைக் கொடுத்தார்கள்.

அவற்றில் வெண்மைக் கொடிகள் ஆறு, கருநிற கொடிகள் ஐந்து பச்சை நிற கொடிகள் ஆறு ஆக 17 கொடிகளைக் கொடுத்



PDF ISLAM

தார்கள். அந்த வழி முறையைத் தொடர்ந்தே அடுத்தடுத்த கலீஃபாக்களும்,ஆளுநர்களும் அடையாளச் சின்னங்களாக கொடிகளை நிர்ணயித்து தங்கள் ஆட்சி அலுவலகங்களில். இல்லங்களில் பறக்க செய்தனர் என்று இமாம் ஜர்கானி ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்கள் மவாஹிபுத் துன்யா எனும் கிரந்தத்தின் விரிவுரையில் கூறியுள்ளார்கள்

இம்மையில் மட்டுமல்ல மறுமையிலும் மாநபிகளின் கரத்திலே கொடி கொடுக்கப்படும் அதன் பெயர் லிவாவுல் ஹம்து அது பற்றி நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறுகிறார்கள்.

**லிவாவுல் ஹம்து**

எனது கரத்தில் லிவாவுல் ஹம்து என்னும் கொடி இருக்கும் எனக்கு பெருமையில்லை, ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் முதல் அனைத்து நபிமார்களும் என் கொடியின் (நிழலிலே) தான் நிற்பார்கள் என்று கூறிய தகவலை அபூஸயீது ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் அறிவிக்கிறார்கள்.

நூல் திர்மிதி, மிஷ்காத்

## ஏனைய நபிமார்கள் ஏந்தும் கொடிகள்

**லிவாவுஸ் ஸப்ரு**

பொறுமையின் கொடி என்பது இதன் பொருளாகும். இது நபி ஐய்யூப் அலைஹிஸ்ஸலாம் அவர்களுக்கு வழங்கப்படும். பொறுமையாளர்கள் இதன் நிழலில் நிற்பார்கள்.

**லிவாவுல் இ ய்ய் புப்பா**

பத்தினித்தன கொடி என்பது இதன் பொருளாகும். இது அழகு நபி யூசுப் அலைஹிஸ்ஸலாம் அவர்களுக்கு வழங்கப்படும். உலக வாழ்வில் பத்தினித்தனத்துடன் வாழ்ந்து தம் கற்புகளைக் காத்த ஆண்களும், பெண்களும் இக்கொடியின் நிழலில் நிற்பார்கள்.


PDF ISLAM

**லிவாவுல் புகா**

அழுகையின் கொடி என்ற அர்த்தம் பொதிந்த இக்கொடி அபுல் பஷருஃத்தானி (மனித குலத்தின் இரண்டாவது தந்தை) என அழைக்கப்படும் நபி நூஹ் அலைஹிஸ்ஸலாம் அவர்களிடம் வழங்கப்படும். அல்லாஹ்வின் மீது கொண்ட அச்சத்தால் அழுது சுரந்த கண்களை உடைய கண்ணியவான்கள் இக்கொடியின் நிழலில் நிற்பார்கள்.

**லிவாவுல் ஃபக்ரு**

வறுமையின் கொடி என்ற இக்கொடி நபி ஈசா அலைஹிஸ்ஸலாம் அவர்களுக்கு வழங்கப்படும். வறுமையிலும் வளம் கண்டு வாழ்ந்து சிறந்த ஏழைகள் இதனுள் நிற்பார்கள்.

**லிவாவுஷ் ஷுக்ரு**

ஆட்சி, அதிகாரங்கள் ஒருங்கே வழங்கப்பட்ட நபி சுலைமான் அலைஹிஸ்ஸலாம் அவர்களிடம் இக்கொடி வழங்கப்படும், நன்றியின் கொடி என்பது இதன் பொருள்.

**லிவாவுல் இல்ம்**

கல்வியின் கொடி என்று பொருள் இது இப்ராஹிம் அலைஹிஸ்ஸலாம் அவர்களுக்கு வழங்கப்படும் இதன் நிழலில், கற்று கற்றதன் படி ஒழுகிய கல்விமான்கள் நிற்பார்கள்.

காயல்பட்டணத்தில் பிறந்து கல்விச் சேவை பல புரிந்து பல நாடுகளிலும் மஸ்ஜித், மத்ரஸாக்களை நிறுவி கீழக்கரையில் மறைந்து வாழும் மஹான் அல்–ஆலிமுல் அரூஸ் மாப்பிள்ளை லெப்பை ஆலிம் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் மங்ானி என்ற நூலில் இத்தகவலை தெரிவிக்கிறார்கள்.

**நாற் பெரும் கலீபாக்களின் கொடிகள்**

**லிவாவுஸ்ஸித்கு :** உண்மையாளர்களின் கொடி என்று பொருள்படும். இக்கொடி ஹழ்ரத் அபூபக்ரு ஸித்தீக்



PDF ISLAM

ரலியல்லாஹு அன்ஹு அவர்களிடம் கொடுக்கப்படும். உலகில் வாழும் காலத்தில் உண்மையே வாழ்வாய் கொண்ட உயர் வகுப்பினர் இக்கொடியின் நிழலில் இளைப்பாருவார்கள்.

**லிவாவுல் அத்ல்** நீதத்தின் கொடி என்று பொருள்படும். ஹழ்ரத் உமர் ரலியல்லாஹு அன்ஹு அவர்களிடம் கொடுக்கப்படும். இக்கொடியின் நிழலில் - நீதவான்கள் நிம்மதி பெறுவார்கள்.

**லிவாவுஸ் ஸத்கா** தர்மத்தின் கொடி என்று பொருள்படும்.

தான தர்மம் செய்வதில் முனைப்புடன் முன் நிற்கும் உஸ்மான் ரலியல்லாஹு அன்ஹு அவர்களிடம் இக்கொடி கொடுக்கப்படும். ஈந்து வந்த ஈகையாளர்கள் இதில் இருப்பார்கள்.

**லிவாவுஸ் ஷுஹதா** இறைவழியில் உயிர் நீத்தோருக்கான கொடி என்று பொருள்படும். .

தானும் ஷஹீதாக்கப்பட்டு, தன்னிரு கண்மணிகளான குழந்தைகளையும் (ஹஸன் ஹுஸைன் ரலியல்லாஹு அன்ஹுமா) சத்தியத்திற்காக சமர்ப்பணம் செய்த சான்றோர் இமாம் அலீ முர்தழா கர்ரமல்லாஹு வஜ்ஹஹு அவர்கள் கையில் இக்கொடி கொடுக்கப்படும்.

இறைவழியில் இறைத்தூதரின் திருவழியில் இனிய இஸ்லாத்திற்காக உயிர் நீத்த உத்தம தியாகிகளாம் ஷுஹதாக்கள் இதன் நிழலில் நிற்பார்கள்.

**இன்னும் சில கொடிகள்**

ஹழ்ரத் முஆத் பின் ஜபல் ரலியல்லாஹு அன்ஹு அவர்களிடத்தில் கொடுக்கப்படும் கொடியின் கீழ் ஃபுகஹாக்கள் என்னும் சட்ட வல்லுனர்கள் இருப்பார்கள்

ஹழ்ரத் அபூதர் கிபாரி ரலியல்லாஹு அன்ஹு அவர்களிடத்தில் கொடுக்கப்படும் கொடியின் கீழ் ஜாஹிதீன் எனப்படும் உலக பற்றற்ற உத்தமர்கள் இருப்பார்கள்.


PDF ISLAM

ஹழ்ரத் அபூதர்தா ரலியல்லாஹு அன்ஹு அவர்களிடம் கொடுக்கப்படும் கொடியின் கீழ் ஏழை யாசகர்கள் இருப்பர்.

ஹழ்ரத் உபையிப்னு கஅப் ரலியல்லாஹு அன்ஹு அவர்களிடத்தில் கொடுக்கப்படும் கொடியின் கீழ் திருக்குர்ஆனை அழகிய முறையில் ஓதும் காரிகள் இருப்பார்கள்.

முஅத்தின்கள் (பாங்கு ஒலிப்பவர்கள்) பிலால் ரலியல்லாஹு அன்ஹு அவர்களின் கரத்தில் கொடுக்கப்படும் கொடியின் நிழலில் நிற்பார்கள்.

ஹழ்ரத் ஹுஸைன் ரலியல்லாஹு அன்ஹு அவர்களிடத்தில் கொடுக்கப்படும் கொடியின் கீழ் அநியாயமாக கொலை செய்யப்பட்ட ஷுஹதாக்கள் இருப்பார்கள்.

(தஃப்ஸீர் ருஹுல் பயான் வசனம் எண் 3:171)

## லைலத்துல் கத்ரு இரவில்

ஆயிரம் மாதங்களை விட சிறப்புக்குரிய இரவு என இறை மறைக் குர்ஆன் கூறும் லைலத்துல் கத்ரு இரவில் ஜிப்ரீல் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் நான்கு கொடிகளுடனும், எண்ணிலடங்கா வானவர்களுடனும் பூமிக்கு வருகிறார்கள்.

அந்நான்கு கொடிகளை கஅபாவிலும், பைத்துல் முகத்தஸிலும், தூர்சீனா மலை மீதும் மாநபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் மகரந்த பட்டணமாம் மதீனத்து மண்ணில் மணம் மிக்க ரவ்ழா ஷரீபிலும் கொடியை நட்டி, மஃரிபு முதல் பஜ்ரு வரை மாந்தர்கள் புரியும் நற்செயல்களை சேகரிப்பார்கள்.

அல்லாமா அஃலா ஹழ்ரத் ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்களால் மொழியாக்கம் செய்யப்பட்ட கன்ஜுல் ஈமான் என்ற திருக்குர்ஆன் தர்ஜமாவிற்கு தப்ஸீர் எழுதிய ஹகீமுல் உம்மத் அல்லாமா அஹ்மத் யர்கான் ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்கள் தங்கள் தப்ஸீரில் மேற்கண்ட செய்தியை சிறப்பாக கூறியுள்ளார்கள்.



PDF ISLAM

ஹழ்ரத் அப்துல்லாஹ் இப்னு அப்பாஸ் ரலியல்லாஹு அன்ஹுமா அவர்கள் அறிவிக்கிறார்கள்.

நிச்சயமாக ஜிப்ரீல் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் லைலத்துல் கத்ரு இரவில் பெருங்கூட்டமான மலக்குகளுடன் இறங்குவார்கள், அவர்களிடம் பச்சை நிற கொடி இருக்கும், அதனை கஅபாவின் மீது நட்டுவார்கள்.

(நுள்முத்துூர் லில் பகாயீ சூரத்துல் கத்ருடைய விரிவுரை)

ஆதி நபி ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்களின் புனித ஆன்மா உடலை விட்டும் பிரிகிற அந்நேரம் அல்லாஹ்வின் உத்தரவு படி, வானலோக சீலர்களான மலக்குகள் கொடிகளோடு பூமிக்கு வந்து அந்த புனித ஆத்மாவின் உயிரைப் பெற்றுச் சென்றனர்.

அந்நேரம் வானம் பூமிக்கு நடுவே சுவனத்து ஆசனம் ஒன்று அமைக்கப்பட்டிருந்தது. அதன் மீது அமர்ந்திருந்த ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்களை அழைத்து சற்று சிரம் உயரத்திப் பாருங்களேன் என ஜிப்ரீல் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் கூறி னார்கள், தலை உயர்த்திப் பார்த்த ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் அதிசயிக்கும் வகையில் வான வீதிகளில் மலக்குகள் திரைகளைப் பிடித்தும் கொடிகளைப் பிடித்தும் நின்றிருந்தனர்.

இந்த செய்தி மூன்று பாகங்களைக் கொண்ட பெரிய கஸஸுல் அன்பியா நூலின் 56, 57 ம் பக்கங்களில் பதியப் பெற்றிருப்பதாக தஞ்சாவூரிலிருந்து வெளிவரும் தர்கா என்ற இதழின் சார்பில்வெளியிடப்பட்ட இஸ்லாத்தில் புனித கொடிகள் என்ற நூலில் அதை கோர்வை செய்த மௌலவி சையத் அஹ்மத் (எ) ரியாஸ் லதீஃபி அவர்கள் ஆய்வு செய்து அறிவித்திருக்கிறார்கள்.

இன்னும் பல அபூர்வமான செய்திகளை ஆதாரத்துடன் கூறி நம்மை ஆனந்தப் பேருவகை அடையச் செய்திருக்கிறார்கள்.

## ஈத் மீலாதுன் நபி கொடி

பூஉலகை புனிதம் செய்யப்பிறந்த நம் புனிதத்தின் பேரரசர் பூமான் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள்


PDF ISLAM

பறக்கும் போது வானவர் தலைவர் ஜிப்ரீல் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் மூன்று கொடிகளைப் பிடித்துக் கொண்டு பூமிக்கு வந்தார்கள்.

ஒன்று இறைப் பேராலயமாம் புனித கஃபத்துல்லாஹ்விலும், மற்றொன்று பைத்துல் முகத்தஸிலும், மூன்றாவதொன்று ஆமினா அம்மா ரலியல்லாஹு அன்ஹா அவர்களின் வீட்டிலும் நட்டி பூமான் நபியின் புனிதப் பிறப்பை புவியில் பிரகடனம் செய்தார்கள் என்ற தகவலும் மேற்கூறிய நூலிலேயே மேற் கொள்ளப்பட்ட தகவல் ஆகும்.

இன்னும் கொடிகள் குறித்த தகவல்கள் குர்ஆனிலும் ஹதீஸிலும் ஏராளமாகவும் தாராளமாகவும் காணக்கிடைக் கின்றன. நமது முன்னோர்களால் நடைமுறை படுத்தப்பட்ட எந்த ஒன்றும் குர்ஆன் ஹதீஸிற்கு அப்பாற் பட்டதல்ல என்பதையே அவை நிரூபிக்கின்றன.

எனவே, கொடிகள் உலகிலும், கப்ருகளிலும், மறுமையிலும் தொடரும் சங்கதியாகவே உள்ளன என்பதை மேற்கண்ட தகவல்கள் வெளிச்சத்தில் தெரிந்து கொள்ள முடிகிறது.

கொடியேற்றுவது கூடாது என்று கூறியோர், அவர்கள் கூறத் துவங்கிய காலத்தில் வேண்டுமானால் அவர்களிடம் கொடி இல்லை. ஆனால் இன்றோ அவர்களின் இரண்டு கைகளிலும் கொடிகள் இருக்கத்தான் செய்கின்றன. மாதந்தோறும், வாரந் தோறும் கொடி ஏற்றுவது பேரணிகளில், ஊர்வலங்களில் கொடி பிடித்துச் செல்வதும், தங்கள் அலுவலகங்களில்,வாகனங்களில் கொடிகளைப் பறக்கச் செய்வதும் அவர்களின் அன்றாட நடை முறைகளாகி விட்டன.

இத்தனைக்குப் பிறகும் கொடி ஏற்றுவது கூடாது என்று எப்படித்தான் கூறுகிறார்களோ அதை எப்படித்தான் அவர்களின் சீடர்கள் நம்புகிறார்களோ என்பதுதான் நமக்கு ஆச்சரியமாகவும், அதிசயமாகவும் இருக்கிறது. அல்லாஹ் நம் யாவரையும் நல் வழி மீதில் நிலைத்திருக்கச் செய்வானாக ஆமீன்.



PDF ISLAM

# 6

# மறைந்தோருக்கு நன்மைகளை சமர்ப்பணம் செய்ய சன்மார்க்கத்தில் இடம் உண்டா?

ஃபாத்திஹாவின் ஸவாபு மரணமடைந்தவருக்குக் கிடைக்கிறதா?

ஒரு முஸ்லிம் தான் செய்யும் நல்ல அமலுக்குப் பலனாகத் தனக்குக் கிடைக்கும் ஸவாபை, மரணமடைந்துவிட்ட ஒரு முஸ்லிமின் ஆன்மாவுக்கு (ரூஹுக்கு) சேர்த்து வைக்கும்படி அல்லாஹ்விடம் பிரார்த்தித்தால், நிகரற்ற அருளாளனாகிய அல்லாஹ், தன் அடியானின் அந்தத் தாழ்மையான வேண்டு கோளை ஏற்று (கபூல் செய்து), அந்த அடியானின் நாட்டப்படி நிய்யத்தின்படி அந்த நல்ல அமலின் ஸவாபை, மரணமடைந்து விட்ட முஸ்லிமின் ஆன்மா (ரூஹ்) பெற்றுப் பயனடையும்படி அருள்புரிகிறான்.

மரணமடைந்த முஸ்லிமின் ஆன்மாவுக்கு இவ்வாறு ஸவாபு அனுப்பி வைப்பதற்கு நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் ஹதீஸில் ஆதாரம் இருக்கிறது.

ஹழரத் சஅத் பின் அபீவக்காஸ் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் நபிமணி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் உபதேசங்கள் நிகழ்த்தும்போது, முன் வரிசையில் அமர்ந்து, உரத்த குரலில், ஆனால் பணிவுடன், கப்ஹானல்லாஹ்! என்று சொல்லும் பழக்கமுடையவர்களாக இருந்தார்கள். ஹழரத் சஅத் ரலியல்லாஹு அன்ஹு அவர்களின் உற்சாகத்தை மலக்குகளும் பாராட்டுகிறார்கள் என நபிமணி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அறிவித்திருந்தார்கள்.



PDF ISLAM

பொருளடக்கம்

[illegible] ஹழரத் சஅத் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் சோகமாக இருப்பதை நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கண்டார்கள். மரணமடைந்துவிட்ட தமது தாயாருக்காக ( உம்மு சஅதுக்காக ) என்ன செய்ய வேண்டுமென்ற கவலையே ஹழரத் சஅத் ரலியல்லாஹு அன்ஹு அவர்களின் சோகத்திற்குக் காரணம் என்பதை நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அறிந்திருந்தார்கள்.

யா ரஸூலல்லாஹ்! ( என் அன்னை ) உம்மு சஅத் இறந்துவிட்டார் (அவருக்காக ) எத்தகைய தர்மம் ( ஸதகா ) செய்வது மிக மேலானது என மிக அடக்கத்துடன் ஹழரத் சஅத் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் வினவினார்கள். அதற்கு ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள், தண்ணீர் என்று அன்புடன் பதிலளித்தார்கள். எனவே, கிணறு தோண்டப்பட்டு, இது உம்மு சஅதுக்காக (சஅதின் அன்னையாருக்காக)! என அறிவிக்கப்பட்டது.

தோண்டப்பட்ட கிணற்றிலிருந்து கிடைத்த தண்ணீரால் மனிதர்களும் மிருகங்களும் அடைந்த பலனால் கிடைத்த ஸவாபு, உம்மு சஅதின் ஆன்மாவுக்கு ( ரூஹுக்கு ) கிடைக்கும் என்ற உண்மை இதிலிருந்து தெளிவாகிறது.

அல்லாஹ் ரஸூலின் கட்டளைகளின்படி நாம் செய்யும் நற்காரியங்களின் ஸவாபை மரணமடைந்துவிட்ட முஸ்லிம்களின் ஆன்மாவுக்கு அனுப்பி வைப்பது கூடும் என்ற உண்மை இதன் மூலம் ஊர்ஜிதமாகிறது.

இது சம்பந்தமாக மேலும் சில ஹதீஸ்களைப் பார்ப்போம்:

யா ரஸூலல்லாஹ்! மரணமடைந்து விட்டவர்களின் சார்பில் நாங்கள் தர்மம் செய்கிறோம், ஹஜ் செய்கிறோம். இவை எல்லாம் அவர்களுக்குச் சேர்கின்றனவா? என்று பொருள்பட இறைத்தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடம் ஹழரத் அனஸ் (ரலியல்லாஹு அன்ஹு) அவர்கள் பணிவுடன்



PDF ISLAM

கேட்டார்கள். அதற்கு அண்ணல் ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள், ஆம்! நிச்சயம் சேர்கிறது! உங்களில் யாருக்காவது ஒரு தட்டு (நிறைய) அன்பளிப்பு (ஹதியா) கிடைத்தால் எவ்வாறு மகிழ்ச்சி அடைகிறீரோ அவ்வாறே மரணமடைந்தவர்களுக்கு அவை போய்ச் சேர்ந்ததும் அவர்கள் மகிழ்கிறார்கள் என்று பொருள்பட மிகத் தெளிவாக பதிலளித்தார்கள்.

இன்னொரு ஹதீஸில் கீழ்க்கண்டவாறு வருகிறது:

உங்களில் யாராவது தர்மம் கொடுத்தால், அதன் ஸவாபைத் தன் பெற்றோருக்கு அவர் சமர்ப்பித்து விடவும். அதன் ஸவாபு அவருடைய பெற்றோருக்குக் கிடைப்பதுடன், அவருக்குக் கிடைக்கும் ஸவாபிலும் கொஞ்சம் கூட குறையாது என்று பொருள்பட நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் நவின்றார்கள் என்ற ஹதீஸை ஹழரத் அப்துல்லாஹ் இப்னு உமர் (ரலியல்லாஹு அன்ஹு ) அவர்கள் அறிவித்துள்ளார்கள்.

ஒரு முஸ்லிம் பதினோரு தடவைகள் சூரா இக்லாஸ் ( குல் ஹுவல்லாஹு என்ற சூரா ) ஓதி, அதன் ஸவாபை மரணமடைந்த அனைவருக்கும் சமர்ப்பித்தால், மரணமடைந்து விட்டவர்களின் எண்ணிக்கையின் அளவுக்கு நிகரான ஸவாபு, அவ்வாறு ஓதுபவருக்கும் முறையாகக் கிடைக்கிறது என ஹதீஸில் அறிவிக்கப்பட்டுள்ளது என்று புகழ் பெற்ற மார்க்கக் கிரந்தமான துர்ருல் முக்தாரில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இவை போன்ற ஹதீஸ்களிலிருந்து ஃபாத்திஹா ஓதுவதற்கான அடிப்படையின் தெளிவான ஆதாரம் நன்குக் கிடைக்கிறது. இவற்றையெல்லாம் கேட்டும் தெரிந்தும், ஃபாத்திஹா ஓதுவது மிகவும் நல்லதொரு அமல்தான் எனத் தெளிவுபெற மறுப்பது, அருமை நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் சத்திய வாக்கை மறுப்பதாகும். அத்தகைய இழிநிலையிலிருந்து வல்ல நாயன் நம்மை என்றென்றும் காப்பாற்றி அருள்புரிவானாக!


PDF ISLAM

## குர்ஆன் கத்தம் ஓதுதல்:

திருக்குர்ஆன் முழுவதையும் ஓதி முடிப்பதற்கு குர்ஆன் கத்தம் அல்லது கத்முல் குர்ஆன் என்கிறோம்.

ஹலரத் அனஸ் பின் மாலிக் (ரலியல்லாஹு அன்ஹு) அவர்கள், கத்முல் குர்ஆன் செய்யும் போதெல்லாம், தம் வீட்டார் அனைவரையும் சேர்த்து வைத்து துஆ ஓதி வந்தார்கள் என்ற செய்தியைப் புகழ் பெற்ற இமாம் நவவீ ரஹிமஹுல்லாஹ் அவர்கள், கிதாபுல் அத்கார் எனும் தமது நூலில் திலாவத்துல் குர்ஆன் எனும் அத்தியாயத்தில் பதிவு செய்துள்ளார்கள்.

திருக்குர்ஆன் முழுவதும் ஓதி துஆ கேட்டால், நாற்பதாயிரம் மலக்குகள் அதற்கு ஆமீன் சொல்லுகிறார்கள் என, தகுந்த ஆதாரங்களுடன், தஃப்ஸீர் ரூஹுல் பயான் எனும் திருக்குர்ஆனின் அரிய விரிவுரையில் பதியப்பட்டுள்ளது.

மேலும், திருக்குர்ஆன் ஓதி கத்தம் செய்தவருக்காக அந்த மலக்குகள் துஆ செய்கிறார்கள் என்றும் அவருக்காகப் பாவமன்னிப்பும் கேட்கிறார்கள் என்றும் இதே விரிவுரையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதனால், குர்ஆன் கத்தம் செய்து ஓதப்படும் துஆ ஏற்றுக் கொள்ளப்படுகிறது என்ற உண்மை தெரியவருகிறது. எனவே, புனித ரமலான் மாதத்திலே தராவீஹ் தொழுகையில் குர்ஆன் ஓதி கத்தம் செய்வதையொட்டி 27ஆம் இரவு தராவீஹ் தொழுகை முடிந்தபின், கூட்டமாக அமர்ந்து குர்ஆன் கத்தம் செய்து ஃபாத்திஹா ஓதி துஆ செய்வதும் மற்ற நேரங்களிலும் குர்ஆன் கத்தம் செய்து ஃபாத்திஹா ஓதி துஆ செய்வதும் நேர்வழியிலுள்ள சுன்னத் வல் ஜமாஅத்தினரிடையே நிலவிவரும் நல்லதொரு அமலாகும்.

## ஃபாத்திஹா ஓத நாள் நிர்ணயிக்கலாமா?

சில குறிப்பிட்ட நாட்களில் ஃபாத்திஹா ஓதுவதற்கு எத்தகைய ஆட்சேபனையும் எழுப்ப முடியாது.



PDF ISLAM

ஹலரத் அமீர் ஹம்ஜா (ரலியல்லாஹு அன்ஹு) அவர்களுக்காக அவர்களின் மறைவுக்குப்பின், மூன்றாவது நாள், ஏழாவது நாள், நாற்பதாவது நாள், ஆண்டு நிறைவு ஆகியவற்றையொட்டி, நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் ஸதகா (தான தர்மம்) கொடுத்திருக்கிறார்கள்.

*(ஆதாரம்: அன்வாருஸ் ஸாதிஆ மற்றும் ஸானதுர் ரிவாயாத்)*

எனவே, மரணித்தவருக்காக மூன்றாம் நாள் முதலிய குறிப்பிட்ட நாட்களில் நம் சுன்னத் வல்ஜமாஅத்தினர் ஓதிவரும் ஃபாத்திஹா சரியானதே என்று இதன் மூலம் ஊர்ஜிதமாகிறது.

## ரூஹின் வருகை :

மரணமடைந்தவரின் ஆன்மா (ரூஹ்) வியாழனன்று (அதாவது வெள்ளி இரவு) தன் குடும்ப நபர்கள் வசித்து வரும் வீட்டிற்கு வந்து, தன் குடும்பத்தினர் தனக்காக தான தர்மம் (ஸதகா) கொடுக்கிறார்களா எனப் பார்க்கிறது எனத் தகுந்த ஆதாரங்களின் அடிப்படையில் ஷிஃஅத்துல் லம்ஆத் என்ற கிரந்தத்தில் ஜியாரத்துல் குபூர் என்ற அத்தியாயத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஒருவர் மரணமடைந்த பின், தொடர்ந்து ஏழு நாட்கள் அவருடைய ரூஹுக்காக ஸதகா கொடுக்க வேண்டும் என்றும் இதே நூலில் இதே அத்தியாயத்தில் வருகிறது.

## ஒரு முக்கிய எச்சரிக்கை!

சாதாரண முஸ்லிம்களுக்காக ஓதப்படும் ஃபாத்திஹாவுக்கும் அவ்லியாக்களுக்காக ஓதப்படும் ஃபாத்திஹாவுக்குமிடையில் மிக முக்கியமான வேறுபாடு உண்டு என்பதை நாம் ஒரு போதும் மறக்கலாகாது.

சாதாரண முஸ்லிம்களுக்காக ஃபாத்திஹா ஓதுவதன் நோக்கம் அவ்வாறு ஓதுவதற்கு நிகரான ஸவாபை மரணித்தவரின் ரூஹுக்குச் சேர்க்கும்படி நிகரற்ற அருளாளனாகிய அல்லாஹ்விடம் கெஞ்சிப் பிரார்த்திப்பதாகும். அந்தப் பிரார்த்தனையைக் கருணை கொண்டு ஏற்று அளவற்ற அருளாளனாகிய அல்லாஹ்


PDF ISLAM

அந்த ரூஹுக்கு அந்த ஸவாபைச் சேர்த்து வைத்துத் தகுந்த நிவாரணத்தை அந்த மரணித்தவருக்கு அளித்து அருள் புரிகிறான். அல்லாஹ்வின் அளவற்ற அருளுக்கு எல்லையே இல்லை!

அத்துடன், அவ்வாறு ஓதியவருக்கு அருளாளனாகிய அல்லாஹ் ஸவாபு தந்தருள்கிறான்.

ஆனால், நபிமார்கள் மீதும் அவ்லியாக்கள் மீதும் நாம் ஓதும் ஃபாத்திஹாவின் நோக்கம் இப்படிப்பட்டதல்ல. ஏனெனில், நபிமார்கள் ( அலைஹிமுஸ்ஸலாம் ) அனைவரும் பாவமே அறியாதவர்கள் பாவம் ஏதும் செய்யாதவர்கள். பாவத்தை விட்டும் பாதுகாக்கப்பட்டவர்கள் பாவமான எண்ணமே இல்லாத வர்கள்.

அவ்லியாக்கள் அனைவரும் பாவத்தை விட்டு நீக்கப்பட்ட வர்கள் அல்லாஹ்வுடைய பக்தர்கள். அல்லாஹ்வின் பேரருள் பேரின்பம் பெற்ற அல்லாஹ்வுடைய நேசர்கள் நாதாக்கள். எனவே, அவ்லியாக்களாகிய இந்தப் புனிதர்களின் மீது ஃபாத்திஹா ஓதி, அதன் ஸவாபை இவர்களின் புனித ஆன்மா வுக்குச் சமர்ப்பித்து, இவர்களின் புனித ஆன்மாவுடன் தொடர்பு கொண்டு, ஃபைள் என்னும் ஆன்மீகப் பயன் பெறுவதற்காகத் தான் நாம் அவ்லியாக்களின் மீது ஃபாத்திஹா ஓதுகிறோம்.

இந்த அடிப்படை உண்மையை மறுக்கும் கூட்டத்தினர் அனைவருமே நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களால் நன்மாராயங் கூறப்பட்ட நேர்வழி யிலுள்ள ஒரே திருக்கூட்டத்தினராகிய அஹ்லுஸ்ஸுன்னத் வல்ஜமாஅத்துக்குப் புறம்பானவர்கள்.



PDF ISLAM

# 7

# நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் நவின்ற நாற்பது நற்பதம்

1. உங்களிடம் இரண்டு விஷயங்களை விட்டுச் செல்கிறேன். நீங்கள் அவ்விரண்டையும் பற்றிப் பிடித்திடும் காலமெல்லாம் (நேர்) வழி தவற மாட்டீர்கள். அல்லாஹ்வின் திருவேதம்; என் குடும்பத்தார். *நூல்: ஹாகிம்*

2. உங்களிடம் இரண்டு விஷயங்களை விட்டுச் செல்கிறேன். நீங்கள் அவ்விரண்டையும் பற்றிப் பிடித்திடும் காலமெல்லாம் (நேர்) வழி தவற மாட்டீர்கள். அல்லாஹ்வின் திருவேதம்; அவன் தூதரின் (சுன்னத்தான) நடைமுறை. *நூல்: மிஷ்காத்*

3. கியாமத்து நாளில் பாக்கியங்களைப் பற்றி ஓர் அடியான் விசாரிக்கப்படுவதில் முதன்மையானது... உன்னுடைய உடலை நாம் சுகமாக்கி வைக்கவில்லையா? குளிர்ந்த நீரினால் உன்னுடைய தாகத்தை நாம் தீர்க்கவில்லையா? என்பது தான் என நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அருளினார்கள்.

*அபூஹுரைரா (ரலியல்லாஹு அன்ஹு) நூல்: மிஷ்காத்*

4. நோன்பும் குர்ஆனும் அடியானுக்காக அல்லாஹ்விடம் சிபாரிசு செய்கின்றன. நோன்பு கூறுகிறது: நாயகனே, இந்த மனிதனுக்கு உணவையும், ஆசையையும் பகலில் நான் தடுத்து வைத்திருந்தேன். ஆகவே, இவன் விஷயத்தில் என் சிபாரிசை நீ ஏற்றுக் கொள்வாயாக! என்பதாக.

குர்ஆன் கூறுகிறது: நான் இந்த மனிதனுக்கு இரவில் தூக்கத்தைத் தடுத்து வைத்திருந்தேன். ஆகவே, இவன்



PDF ISLAM